

BHARATHIDASAN

# A LUMINOUS HOME & A DISMAL HOUSE

## Kudumba Vilakku & Irunda Veedu

English Rendering

**M.S. VENKATACHALAM**

# A Luminous Home and A Dismal House

## Kudumba Vilakku and Irunda Veedu

# A LUMINOUS HOME
# AND
# A DISMAL HOUSE

Kudumba Vilakku and Irunda Veedu


By
Revolutionary Poet
**Bharathidasan**

English Rendering
**M.S.Venkatachalam**



Bharathidasan University
Palkalaiperur, Thiruchirappalli - 620 024. Tamil Nadu

**A Luminous Home and**
**A Dismal House**
Kudumba Vilakku and
Irunda Veedu

*English Rendering*
**M.S.Venkatachalam**

© : Bharathidasan University
Palkalaiperur
Tiruchirappalli - 620 024.
Tamil Nadu.

*First Edition :* April, 2006

*Paper :* Maplitho

*Size :* Demy 1/8

*Pages :* 136

*Price :* 65

*Laser Typeset :* Vanchi Achagam,
Turaiyur, Trichy.

*Layout :* M.Balamurugan,
Chennai - 600 014.

*Printed at :* Ponni Achagam,
Chennai - 600 091.

# Bharathidasan University

Dr. C.Thangamuthu
Vice - Chancellor

Palkalaiperur
Tiruchirappalli - 620 024

## FOREWORD

Tamil Nadu has seen a marked renaissance and reformation in Tamil literature during the twentieth century. Poet Bharathi and his ardent disciple Bharathidasan were the two noteworthy poets that adorned the firmament. National spirit was predominant in the verses of Bharati while the love of Tamil and a clamour for social reform were predominant in the verses of Bharathidasan.

Though both these poets were contemporaries, Bharati's verses were rendered into English by a number of deft and well-trained hands. But till the commencement of the birth centenary celebrations of Bharathidasan, no concerted effort has been made for translating his verses into English. Thiru. M.S.Venkatachalam was the pioneer in this field, when he published his "Selected Poems of Bharathidasan" during August, 1992. Almost all the famous verses such as 'The Slope of Sanjeevi Mount" - "The Revollutionary Poet" - " A Valiant Mother" of Bharathidasan, which find place in his first volume, have been translated in the above work. So far, no other translator has undertaken such an extensive and exhaustive task. Thiru. Venkatachalam, as a pioneer, deserves all praise.

Subsequently two works were published - one by the Bharathidasan University and the other by the Pondicherry Institute of Lingustics and Culture, under same title "Selected Poems of Bharathidasan"; again these two did not cover some of the very important verses of Bharathidasan.

In 1999, Thiru. M.S.Venkatachalam again had translated Bharathidasan's famous epic *Pandian Parisu* under the title "Pandian's Gift" and it was published by the Institute of Asian Studies, Chennai. Another piece of Bharathidasan Ethirparatha Mutham was translated by him in 2004 under the caption **"That Kiss Most Unexpected"**.

When one goes through these translations, we can enjoy the remarkable style of translation exhibited by M.S.Venkatachalam. In fact, he is at home in translating any literature - ancient, medieval or modern! His "Victory Procession" of Ottakoothar already finds an important place in the Fourth volume of "Medieval Indian Literature" of Sahitya Akademi. His **"Concise Kamba Ramayanam"** is widely applauded by one and all.

Now, Bharathidasan's Kudumba Vilakku (Part I) and Irunda Veedu have been translated by M.S.Venkatachalam. Bharathidasan University is extremely happy to publish this recent translation of Bharathidasan's work under the title **"A Luminous Home and A Dismal House"**. I am sure it will be received with the same interest as his other translated works.

Trichy
14.04.2006

C. Thangamuthu

(C.Thangamuthu)

PROF. G. BALAKRISHNAN
*Head, Department of English*
**St. Joseph's college (Autonomous)**
Trichirapalli – 620 002.

TRICHY
02-03-2005.

# FOREWORD

"M.S.V." is a three-lettered *mantra* in the realm of translation. His bi-lingual proficiency is the dream of many but the realization of a few!

Mr. M.S. Venkatachalam has carved for himself a niche by undertaking the stupendous task of rendering select verses from the epoch-making epic, **Kamba Ramayanam** into chaste English verses.

As a translator of great renown, "MSV" has belied the words of Rabindranath Tagore: "A work of translation is like sending an attorney in a love – affair". The beauty, splendour and effect of the original can never be brought out in a work of translation, observe many scholars. But there are gifted translators who challenge the validity of such a statement. And "MSV" belongs to this "rare tribe".

As a true soldier of the Dravidian camp in yester years, he has a spontaneous endearment drawn towards the Bard. He knows his "Bard of Avon" as well. Hence he lisps in numbers and numbers come.

The twin pieces in this volume – A LUMINOUS HOME and A DISMAL HOUSE flash across one's "inward eye" some peaks of prominence in English poetry. It was John Milton who authored the justly famous **Paradise Lost** and Paradise Regained. He also penned **L'legro** and **Il Penseroso** (The Happy Man and The Thoughtful Man respectively)

Bharathidasan's A LUMINOUS HOME and A DISMAL HOUSE recollect to one's mind Lord Tennryion's **Ulysses** and **The Lotos – Eaters**. While lashing at the loathsome Victorians in the latter poem, he promotes the spirit of adventure and advancement in the former.

To drive home the fact that TRUTH SHINES BY CONTRAST AND IS REINFORCED BY PARALLELISM, "MSV" has judiciously chosen the contrasting poems from the Bard. The translator establishes his supremacy with the titular symbol itself. Though A LUMINOUS HOME is a free translation of **குடும்ப விளக்கு** one does not find any literary treason in it! Even a casual reader is bound to appreciate the appropriateness of the adjectives used and the aptness of the words "HOUSE" and "HOME" in the title. The deft hand of master-craftsman is witnessed in the sub-titles given to different stanzas.

"One arm was engaged
in operating the machine.
One arm was engaged
in the stitching process.
Her mouth was engaged
in humming notes of melody.
Her mind was engaged
in the welfare of the family"

The verse cited above is but a touchstone for the ease with which the ordeal of translation has been carried out. One is certain not to miss the rapidity of action. The mother-in-law's ready wit is revealed in her reply.

"On the top of all these articles
He made me sit and squat
Like a monkey on a hill!"

This brings out the naïve humour prevalent in the piece.

The translator does well to portray the myriad mind of a home-maker (Mind you, not a house-wife!). She is a dutiful mother, a responsible daughter-in-law, a help-mate to her husband, a cook *par excellence*, a caring nurse, a natural teacher, an accountant and above all a pervading spirit of domestic delight.

"MSV" deserves our rich kudos for retaining certain expressions in the original such as *kolam, punnai, Aram, konrai, Anril* etc., for any translation of these words will miss the deep connotations attached to each one of them. He has made good this loss through his parenthetical explanations. The culminating verses of A LUMINOUS HOME champion the cause of Tamil and become a clarion-call to the Tamil youth. Remember the Luminous Home is not just an individual home but is a representative of all Tamil Homes!

A challenge meets the mighty pen even of a creative artist when he essays a negative portraiture. To make the merest statement of the merest truth, (இருண்ட வீடு) A DISMAL HOUSE does not disappoint the readers.

"The barking dog, the bellowing cow, the sound of mud pots, the alarm of the boy" at once present a word-picture of "A Dismal House". In such a house, even a clock does not function properly. Hunger and anger reign supreme in such a household. A simple act of assault leads to a gruesome murder. The punch-line of "MSV" "Dark was the house, like the ignorant mind" says it all. In such a house, a stealthy thief and a toy gun have their own roles to play.

A Luminous Home and A Dismal House - Bharathidasan

Instead of cursing darkness, "MSV" lights a candle by ending A DISMAL HOUSE with these words of wisdom: "A house sans education is a dismal one". Education holds the key for the individual growth or societal development.

*All's well that ends well......*

*- PROF. G. BALAKRISHNAN*

English Rendering - M.S.Venkatachalam

## FROM THE TRANSLATOR'S DESK

Artists like *Michael Angelo, Raphael* and *Valez Quez* dominated the field of art and painting during the European Renaissance. Similarly Poets *Bharathi* and *Bharathidasan* dominated the field of 20$^{th}$ century Tamil poetry. Before their arrival on the arena, poetry was considered to be the prestigious pastime of the scholars and the commoners were forced to keep out of it because the verses of those days were couched in such a tough language which was virtually Greek and Latin to them!

*Saint Rāmalinganar* venerably called, *Vallalar* was the pioneer in writing verses in simple and chaste Tamil. Though the subject matter of his poetry was religion and Godhood, it was virtually a revolt against the then existing faith of our people which was dominated by an alien culture. The commoners also did not have the needed awakening to give due prominence to his ideologies.

Bharathi and Bharathidasan became popular because their verses also were couched in simple and chaste Tamil and hence they easily reached the masses and moved their hearts. Of the two, Bharathidasan was virtually a spokesman of the Dravidian Movement and hence he could gain an overwhelming popularity.

Poets in hundreds were enthused to write imitating his style and as the BARD not only marked an era but also made an era! In fact, no other Tamil poet can be credited with such an achievement so far.

The hoary past of the Tamils, he extolled much in his poems and created a good climate for the growth of the Tamil Resurgence Movement, which was spearheaded by the Dravidian Movement. He also used the weapon of his poetry to do away with numerous ills of the society like casteism, illiteracy, superstition and male chauvinism. So, his was "no rhyme without reason". There was an avowed purpose in it.

By way of extolling education, Bharathidasan likens it to the hill-grown banana fruit ("**மலை வாழை அல்லவோ கல்வி?**"). The importance of education especially the education of women for a good and happy domestic life has been well portrayed in his *Kudumba Vilakku* (**குடும்ப விளக்கு**). The miserable position of a family which lacks education is graphically, even humorously portrayed in *Irunda Veedu* (**இருண்ட வீடு**). I have taken the liberty of translating both the titles as "A Luminous Home and A Dismal House". Both are twin poems of contrast as pointed out by Prof. G. Balakrishnan in his learned Foreword. As usual I have brought out this book as a bilingual edition and I honestly feel that I have rendered some service to my mentor-Poet Bharathidasan.


## ACKNOWLEDGEMENTS

With a deep sense of gratitude, I acknowledge here the enthusiastic response and encouragement of Dr. C.Thangmuthu, the revered Vice-Chancellor of the

Bharathidasan University for having brought out this book as a publication of the University. I deem it as a unique honour conferred on me.

I acknowledge the spontaneous co-operation and encouragement of Dr. Ramar Ilango, Head of the Bharathidasan Research Centre, for bringing out this book in such a fine manner.

I profusely thank Prof. G. Balakrishnan, Former Vice-Principal and Head, Dept. of English, St. Joseph's College, Trichy, for having meticulously scanned the translated text besides offering some invaluable suggestions. I offer my sincere thanks to Dr. R.Ganapathy, Pondicherry for having offered his learned suggestions.

Finally I thank the Bharathidasan University and Vanchi Achagam, Turaiyur, for having brought out this book in such a splendid format during the 116th birthday of Bharathidasan i.e.29th April, 2005.

Address

*8, E.V.R. Road,*
*Puthur, Trichy-17.*
*Ph:2773232.*
*Fax:- 2743035(0431)*
*E.Mail:-msv_in_trichy@sancharnet.in*

*M.S. Venkatachalam*
*(Translator)*
*14.04.2005*

# குடும்ப விளக்கு

**காலை மலர்ந்தது :**

*இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை;*
*இரவு போர்த்த இருள்நீங்க வில்லைஃ*
*ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்,*
*நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது.*
*தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த*
*கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது,*
*புலர்ந்தி டப்போகும் பொழுது, கட்டிலில்*
*மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்.*

**அவள் எழுந்தாள் :**

*தூக்கத்தோடு தூங்கி யிருந்த*
*ஊக்கமும் சுறுசுறுப் புள்ளமும், மங்கை*
*எழுந்ததும் எழுந்தன இருகை வீசி;*
*தெளிவிலாக் கருக்கலில் ஒளிபடும் அவள்விழி*
*குளத்து நீரில் குதிக்கும் கெண்டைமீன்!*

# A LUMINOUS HOME

## IT WAS DAWN

The sun has not yet emerged in the east;
The cover of yester night was still on.
Just as inquisitiveness drives away ignorance
Dead night was slowly moving on.
The density of darkness waned like the colour
Of water when with it chalk powder is mixed!
It was just nearing the dawn,
When the eyes of that damsel blossomed.

## SHE GOT UP FROM HER BED

As she woke up from her slumber
Her inborn briskness also did so
Along with her with added vigour!
In the dim light of the twilight hour
Her fish-like eyes brightly dazzled.

**கோலமிட்டாள் :**

*சின்ன மூக்குத் திருகொடு தொங்கும்*
*பொன்னாற் செய்த பொடிமுத் தைப்போல்,*
*துளிஒளி விளக்கின் தூண்டு கோலைச்*
*செங்காந் தள்நிகர் மங்கை விரலால்*
*பெரிது செய்து விரிமலர்க் கையில்*
*ஏந்தி, அன்னம் வாய்ந்த நடையொடு,*
*முல்லை அரும்பு, முத்தாய்ப் பிறக்கும்.*
*கொல்லை யடைந்து குளிர்ப்புதுப் புனலை*
*மொண்டாள்; மொண்டு, முகத்தைத் துலக்கி*
*உண்டநீர் முத்தாய் உதிர்ந்துப் பின்னும்*
*சேந்துநீர் செங்கை ஏந்தித் தெருக்கதவு*
*சார்ந்ததாழ் திறந்து, தகடுபோற் குறடு*
*கூட்டி, மெருகு தீட்டிக் கழுவி,*
*அரிசிமாக் கோலம் அமைத்தனள்; அவளுக்குப்*
*பரிசில் நீட்டினான் பகலவன் பொன்னொளி!*

**காலைப் பாட்டு :**

*இல்லத் தினிலே ஏகினாள்; ஏகி*
*யாழின் உறையினை எடுத்தாள்; இசையில்*
*'வாழிய வையம் வாழிய' என்று*
*பாவலர் தமிழிற் பழச்சுவை சேர்த்தாள்.*
*தீங்கிலாத் தமிழில் தேனிசைக் கலைவைபோய்த்*
*தூங்கிய பிள்ளைகள், தூங்கிய கணவனின்*
*காதின் வழியே கருத்தில் கலக்கவே,*
*மாதின் எதிர்அவர் வந்துட் கார்ந்தனர்.*
*அமைதி தழுவிய இளம்பகல்,*
*கமழக் கமழத் தமிழிசை பாடினாள்.*

## DECORATED WITH KOLAM

Like a embedded in the gold pendant
Of a tiny nose thud, the flame burnt!
Using her tiny fingers of red lily buds
She slightly brightened the light
And carrying the lantern with her palms
Made her gait like a pretty swan
Towards the garden in the backyard
Where jasmines had blossomed like the pearls!
After washing her face with chill water,
And cleansing her mouth and teeth,
She opened the front door
Washed the floor like a tin sheet
And decorated it with *kolam*
Using rice flour for the purpose!
The sun rewarded her with his bright rays!

## MELODIOUS NOTES

Then she again entered the house
Took the lute out of its sheath
And produced melodious notes,
"Let peace and happiness prevail in the world".
This sweet music couched in chaste Tamil
Entered the ears of her spouse and kids
And filled their minds.
All got up and sat before her.
In the warmth of the peaceful morn,
The air was incensed with her song.

**வீட்டு வேலைகள் :**

*பறந்தனள் பச்சைப் பசுங்கிளி; மாடு*
*கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்;*
*செம்பு தவலை செழும்பொன் ஆக்கினாள்;*
*மைம்புனல் தேக்கினாள்; பற்ற வைத்த*
*அடுப்பினில் விளைத்த அப்பம் அடுக்கிக்*
*குடிக்க இனிய கொத்து மல்லிநீர்*
*இறக்கிப் பாலொடு சர்க்கரை இட்டு*
*நிறக்க அன்பு நிறையப் பிசைந்த*
*முத்தான வாயால் முழுநிலா முகத்தாள்*
*''அத்தான்'' என்றனள்; அழகியோன் வந்தான்.*

**கணவனுக்கு உதவி :**

*வந்த கணவன் மகிழும் வண்ணம்*
*குளிர்புனல் காட்டிக் குளிக்கச் சொல்லி,*
*துளிதேன் சூழும் களிவண்டு போல்*
*அன்பனின் அழகிய பொன்னுடல் சூழ்ந்து,*
*மின்னிடை துவள, முன்னின் றுதவி,*
*வெள்ளுடை விரித்து மேனி துடைத்தபின்,*

**குழந்தைகட்குத் தொண்டு :**

*''பிள்ளைகாள்'' என்றனள்! கிள்ளைகள் வந்தனர்!*
*தூய பசும்பொன் துளிகளைப் போன்ற*
*சீயக் காய்த்தூள் செங்கையால் அள்ளிச்*
*சிட்டுக் காட்டியும் சிறுகதை சொல்லியும்*
*தொட்டுத் தேய்த்துத் துளிருடல் நலங்காது*
*நின்ற திருக்கோலம் பொன்னின் சிலைகட்கு*
*நன்னீ ராட்டி நலஞ்செய்து பின்னர்*
*பூவிதழ் மேற்பனி தூவிய துளிபோல்*
*ஓவியக் குழந்தைகள் உடலில்நீர்த் துளிகளைத்*
*துடைத்து, நெஞ்சில் சுரக்கும் அன்பு*
*அடங்கா தவளாய் அழகுமுத் தளித்தே.*
*''பறப்பீர் பச்சைப் புறாக்களே'' என, அவர்*
*அறைக்குள் ஆடைபூண் டம்பலத் தாடினர்!*

## HOUSEHOLD DUTIES

That parrot became brisk in her duties.
Milched the cow and cleansed the house.
Cleansed the utensils, made them fresh
And stored in them chill water for use.
After preparing a nice breakfast,
She mixed hot milk with sugar
In the flavoury coriander decoction.
Then, with overwhelming affection,
That moon-faced damsel called him, "Darling!"
Her handsome man emerged there.

## ASSISTING HER HUSBAND

By suggesting chill water for his bath
She made her husband much pleased.
Like a beetle that hovers around
A drop of honey to enjoy its taste,
That slender waisted damsel stood by his side
And offered a towel and her helping hand.

## SERVICE TO HER KIDS

"O my kids!" she called. All arrived.
Soft soap nut powder golden hued
She placed on her crimson palms,
Gently applied it on their persons
Without harming them the least
And narrating some fables as feast.
She bathed her golden dolls
With warm water and then,
The water drops on her beloved kids
Resembling the dew drops on the petals,
She gently rubbed and kissed their foreheads!
Got all of them neatly dressed and asked
Those young pigeons to hasten to school.

**காலை யுணவு :**

அடுக்களைத் தந்தி அனுப்பினாள் மங்கை.
''வந்தேன்'' என்று மணாளன் வந்தான்.
''வந்தோம்'' என்று வந்தனர் பிள்ளைகள்.
பந்தியில் அனைவரும் குந்தினர் வரிசையாய்த்
தழைத்த வாழைத் தளிரிலை தன்னில்
பழத்தொடு படைத்த பண்டம் உண்டனர்,
காய்ச்சிய நறுநீர் கனிவாய்ப் பருகினர்.

**தாய்தான் வாத்திச்சி :**

நேரம் போவது நினையா திருக்கையில்
பாய்ச்சிய இளங்கதிர் பட்டது சுவர்மேல்.
அவள் கண்டு, காலை ''ஆறுமணி'' என
உரைத்தாள். கணவன் ''இருக்கா'' தென்றான்.
உண்டு ண்டென ஒலித்தது சுவரின்
அண்டையில் இருந்த அடிக்கும் மணிப்பொறி.
பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்.
அவள்வாத் திச்சி, அறைவீடு கழகம்
தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை! அள்ளி
விழுங்கினார் பிள்ளைகள். ''வேளை யாயிற்றே!

**பள்ளிக்குப் பிள்ளைகள் :**

எழுங்கள்'' என்றனள்; எழுந்தனர் சுவடியை
ஒழுங்குற அடுக்கி, உடை அணிவித்துப்
புன்னை இலைபோல் புரையடிச் செருப்புகள்
சின்னவர் காலிற் செருகிச் சிறுகுடை
கையில் தந்து, கையொடு கூட்டித்,
தையல், தெருவரை தானும் நடந்து,
பள்ளி நோக்கித் தள்ளாடி நடக்கும்,
பிள்ளைகள் பின்னழகு வெள்ளம் பருகித்
கிளைமா றும்பசுங் கிளிபோல் ஓடி
அளவ ளாவினாள் ஆள னிடத்தில்!

## BREAKFAST

A telegram she dispatched from the kitchen.
Instantly there appeared her husband.
Her children too followed.
All of them sat in a row
And took the breakfast and fruits
Served on the tender banana leaves.
Then warm water they eagerly drank.

## SHE WAS THEIR TEACHER

When the time was running fast, eluding their thoughts
The tender rays of the morning sun landed on the wall.
"It would be around six" she declared.
"Can't be!" her husband denied.
The alarm time piece kept near the wall
Began to ring confirming her words!
The maid began to teach their lessons!
She was their teacher! It was their class room!
The sweet Sangam Tamil filled the air!
The children devoured that dainty dish!

## CHILDREN TO SCHOOL

"It's time to school", she said. They rose.
She made them wear their school dress
And gave their books neatly piled.
Shoes soft like *punnai* leaves she offered
Along with a tiny umbrella
And accompanied them upto the street.
The tumbling gait of her tender kids
She enjoyed from behind!
Then like a parrot ran towards her husband!

**கடைக்குப் போகும் கணவன்:**

கடைக்குச் செல்லக் கணவன் அழகிய
உடைகள் எடுத்தே உடுக்கலானான்.
''கழுத்துவரை உள்ள கரிய தலைமயிர்
மழுக்குவீர் அத்தான்'' என்று மங்கை சொன்னாள்.
நறுநெய் தடவி நன்றாய்ச் சீவி
முறுக்கு மீசையை நிறுத்திச் சராயினை
இட்டிடை இறுக்கி எழிலுறத் தொங்கும்
சட்டை மாட்டத் தன்கையில் எடுத்தான்.
பொத்தலும் கிழிசலும் பூவை கண்டாள்,
தைத்தாள் தையற் சடுகுடு பொறியால்.
ஆண்டநாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப்
பாண்டிய மன்னன் மீண்டது போல,
உடுத்திய உடையும் எடுத்த மார்பும்
படைத்த கணவனைப் பார்த்துக் கிடந்தாள்.

**வெற்றிலைச் சுருள்:**

ஒற்றி வைத்த ஒளிவிழி மீட்டபின்,
வெற்றி லைச்சுருள் பற்றி ஏந்தினாள்;
கணவன் கைம்முன் காட்டி அவன்மலர்
வாயில் தரத்தன் மனத்தில் நினைத்தாள்;
தூயவன் அப்போது சொன்ன தென்னெனில்,
''சுருளுக்கு விலைஎன்ன? சொல்லுவாய்'' என்னः
''பொருளுக்குத் தக்கது போதும்'' என்றாள்.
''கையிற் கொடுப்பதைக் காட்டிலும் சுருளை
வாயிற் கொடுத்திடு மங்கையே'' என்றான்.
சேயிழை அன்பாய்ச் செங்கை நீட்டினாள்.
குடித்தனப் பயனைக் கூட்டி எடுத்து
வடித்த சுவையினை வஞ்சிக் களித்தல்போல்
தளிர்க்கைக்கு முத்தம் தந்து,
குளிர்வாய் வெற்றிலை குழைய ஏகினனே!

## HUSBAND, A SHOP-KEEPER

Setting out to his shop
A suitable dress he was about to wear.
"Darling! Better you go for hair-dressing!
It has overgrown!" she gave her suggestion.
Applying pure oil, he nearly combed his hair
And trimmed his moustache.
After adjusting the belt of his pants,
He took out his upper garment.
She saw in it some tears here and there
And stitched them in the sewing machine.
As he wore that mended shirt.
She enjoyed his broad chest and felt.
As if the ancient Pandya king
Has again come back to life.

## FOLDED BETEL

Diverting her lustrous eyes from him,
Folded betel she held in her palm
And extended it towards her husband
Intending to put it into his mouth.
Then as he jocularly asked,
"What is the cost of this betel fold?"
"Enough if you pay what it is worth", she replied.
"Better you put it in my mouth, darling
Instead of just giving it", he said.
She then extended her crimson hand.
By way of expressing his deep affection
Towards his beloved spouse,
He kissed her palm
And went along munching the folded betel!

**அவளின் காதலுள்ளம் :**

*உணவுஉண்ணச் சென்றாள். அப்பம்*
*உண்டனள் சீனி யோடு.*
*தணல்நிற மாம்ப ழத்தில்*
*தமிழ்நிகர் சுவையைக் கண்டாள்!*
*மணவாளன் அருமை பற்றி*
*மனம்ஒரு கேள்வி கேட்க,*
*'இணையற்ற அவன் அன்புக்கு*
*நிகராகுமோ இவைகள்' என்றாள்.*

**பிள்ளைகள் நினைவு :**

*பள்ளிக்குச் சென்றி ருக்கும்,*
*பசங்களில் சிறிய பையன்*
*துள்ளிக் குதித்து மான்போல்*
*தொடர்ந்தோடி வீழ்ந்தா னோ என்(று)*
*உள்ளத்தில் நினைத்தாள்; ஆனால்*
*மூத்தவன் உண்டென் றெண்ணித்*
*தள்ளினள் அச்சந் தன்னை!*
*தாழ்வாரம் சென்றாள் நங்கை.*

**வீட்டு வேலைகள் :**

*ஒட்டடைக் கோலும் கையும்*
*உள்ளமும் விழியும் சேர்த்தாள்;*
*கட்டிய சிலந்திக் கூடு*
*கரையானின் கோட்டை யெல்லாம்*
*தட்டியே பெருக்கித் "தூய்மை"*
*தனியர சாளச் செய்து,*
*சட்டைகள் தைப்ப தற்குத்*
*தையலைத் தொட்டாள் தையல்.*

## THE DEPTH OF HER LOVE

She took her breakfast
adding sugar to it.
Sweetness of Tamil she found
in the fire-hued mango fruit.
When her mind weighed
the preciousness of her husband,
"None of these can be so sweet
as his love," she asserted.

## THOUGHT OF HER KIDS

A lurking suspicion she nurtured
in the mind and feared
Whether the youngest of the boys
having gone to school
Might have leapt like a deer and fallen!
But, thinking of her eldest boy
She chased away that fear!
Then went to the verandah.

## HOUSEHOLD WORK

Noticing some dust on the wall
she used a duster pole
And shattered the spider nets
and the pits of white ants.
By neatly sweeping the floor
she made cleanliness prevail everywhere!
Then she began to stitch
the torn portion of the shirt.

**தையல் வேலை :**

ஆடிக்கொண் டிருந்த தையற்
 பொறியினை அசைக்கும் ஓர்கை:
ஓடிக்கொண் டிருக்கும் தைத்த
 உடையினை வாங்கும் ஓர்கை!
பாடிக்கொண் டேயி ருக்கும்
 பாவையின் தாம ரைவாய்!
நாடிக்கொண் டேயி ருக்கும்
 குடித்தன நலத்தை நெஞ்சம்!

**மரச்சாமான்கள் பழுது பார்த்தல் :**

முடிந்தது தையல் வேலை
 முன்உள்ள மரச்சா மான்கள்
ஒடிந்தவை, பழுது பார்த்தாள்
 உளியினால் சீவிப் பூசிப்
படிந்துள்ள அழுக்கு நீக்கிப்
 பளபளப் பாக்கி வைத்தாள்;
இடிந்துள்ள சுவர் எடுத்தாள்
 சுண்ணாம்பால் போரைப் பார்த்தாள்

**மாமன் மாமிக்கு வரவேற்பு :**

நாத்தியார் வீடு சென்ற
 நன்மாமன், மாமி வந்தார்,
பார்த்தனள் உளம்ம கிழ்ந்தாள்.
 பறந்துபோய்த் தெருவில் நின்று
வாழ்த்திநல் வரவு கூறி
 வணக்கத்தைக் கூறி, "என்றன்
நாத்தியார், தங்கள் பேரர்
 நலந்தானா மாமி?" என்றாள்.

## STITCHING OPEARTION

One arm was engaged
in operating the machine;
One arm was engaged
in the stitching process.
Her mouth was engaged
in humming notes of melody.
Her mind was engaged
in the welfare of the family.

## MENDING THE FURNITURE

After finishing the stitching job
she turned towards the furniture
And repaired the broken ones.
By using a sharp tool.
She chiseled the dust marring them
and made them brightly shine.
Did the patchwork on the cracked wall
using lime paste for the purpose.

## RECEIVING HER FATHER-IN-LAW AND MOTHER-IN-LAW

Her father-in-law and mother-in-law
returned from their daughter's home.
She was delighted on seeing them
and so ran fast towards them
And gave them a warm welcome
offering them her helping hand.
"Are my sister-in-law and her kids
doing well?" she asked.

*வண்டிவிட் டிறங்கி வந்த*
*மாமியும் மாம னும்கற்*
*கண்டொத்த மரும கட்குக்*
*கனியொத்த பதிலுங் கூறிக்*
*கொண்டுவந் திட்ட பண்டம்*
*குலையாமல் இறக்கச் சொன்னார்.*
*வண்டியில் இருந்த வற்றை*
*இறக்கிடு கின்றாள் மங்கை.*

**மாமனும் மாமியும் வண்டியில் ஏற்றிவந்த பொருட்கள்:**

கும்பகோணத்துக்கூசா, மஞ்சள், குங்குமம், கண்ணாடி, மைவைத்த தகரப்பெட்டி, செஞ்சாந்தின் சீசா, சொம்பு, வெற்றிலைச் சீவற்பெட்டி, இஞ்சிமூட்டை ஒன்று, எலுமிச்சை மூட்டை ஒன்று, புதிய தவலை, நாலு பொம்மைகள், இரும்புப் பெட்டி, மிதியடிக் கட்டை, பிள்ளைகள் விளையாட மரச்சாமான்கள், இரண்டு மரக்குந்தாணிகள்.

தலையணை, மெத்தை, சல்லடை, புது முறங்கள், எலிப்பொறி, தாழம்பாய்கள், இலுப்பெண்ணெய், கொடுவாய்க் கத்தி, இட்டலித் தட்டு, குண்டான், நல்லெண்ணெய், கைத்தடி, செந்தாழம்பூ.

முக்காலி, பச்சரிசி மாங்காய், விளக்குமாறு, பாதாளக் குரடு, தேங்காய், சுருக்குப்பை தொங்கும் குடை, மூக்குக் கண்ணாடி.

**மருமகள் வினா:**

*''இவையெல்லாம் வண்டிக் குள்ளே*
*இருந்தன என்றால், அந்த*
*அவைக்களம் தனிலே நீவிர்*
*எங்குதான் அமர்ந்தி ருந்தீர்?*
*சுவைப்புளி அடைத்து வைத்த*
*தோண்டியின் உட்பு றத்தில்*
*கவர்ந்துண்ணும் பூச்சி கட்கும்*
*கால்வைக்க இடமி ராதே''*

Getting down from the cart
the husband and wife
Gave a polite answer
to their candy-like daughter-in-law.
And asked her to cautiously handle
the articles they had brought.
As advised, the maid unloaded
all the things brought in the cart.

[The articles brought in the cart by her father-in-law were: A jar made in Kumbakonam, a tin box to keep cum-cum, turmeric powder, mirror and eye-brow paste, a bottle containing some red semi-liquid mixture, a mini-pot, a box to keep betel and betel nuts, a bag of lime fruits and another bag containing ginger. Four small utensils, four dolls, one trunk box, a pair of sandals made of wood, wooden toys for the kids to play with, two wooden tools for pounding rice.

Mattress and pillows, sifting tool, rat trap, mats woven out of screw-pine leaves, curved knife, Iddli-preparing utensil, pure gingilee oil, a walking stick and screw-pine flower.

A three-legged stool suitable to be used at wedding functions, a tasty variety of unripe margo fruits, a broom, coconuts, an umbrella, a pair of spectacles. Surveying all these articles, the daughter-in-law asked her mother-in-law......]

## THE QUERY OF THE DAUGHTER-IN-LAW

"When all these articles were kept
inside this tiny cart
Where did you actually sit
in this sort of pell-mell?
Inside the small utensil
where tamarind had been stored
Even for a small insect
there is no space to place its legs!"

**மாமி விடை :**

*என்றனள் மாமி சொல்வாள்:*
*''இவைகளின் உச்சி மீதில்*
*குன்றுமேல் குரங்கு போல*
*என்றனைக் குந்த வைத்தார்!*
*என்தலை நிமிர, வண்டி*
*மூடிமேல் மொத்த விட்டார்*
*உன்மாமன் நடந்து வந்தார்.*
*ஊரெல்லாம் சிரித்த'' தென்றாள்!*

**மாமன் பேச்சு :**

*''ஊரெல்லாம் சிரிக்க வைத்தேன்*
*என்றாளே உன்றன் மாமி!*
*'யாரெல்லாம் சிரித்து விட்டார்?'*
*எனஉன்றன் மாமி யைக்கேள்*
*பாரம்மா பழுத்த நல்ல*
*பச்சைவா ழைப்ப ழங்கள்*
*நேரிலே இதனை யும்பார்*
*பசுமாட்டு நெய்யின் மொந்தை.*

*''வண்டியில் எவ்வி டத்தில்*
*வைப்பது? மேன்மை யான*
*பண்டத்தைக் காப்ப தற்குப்*
*பக்குவம் தெரிந்தி ருந்தால்*
*முண்டம்இப் படிச்சொல் வாளா?*
*என்னதான் முழுகிப் போகும்*
*அண்டையில் நடந்து வந்தால்?''*
*என்றனன், அருமை மாமன்.*

## THE ANSWER OF HER MOTHER-IN -LAW

To this, her mother-in-law answered
"On the top of all these articles
He made me sit and squat
like a monkey on a hill!
I just dashed against the top of the cart
whenever I lifted my head!
Your uncle came on foot all along!
The whole village laughed at us!"

## UNCLE'S RESPONSE

"Your mother-in-law told that
that entire village laughed at us!
Who were those who mocked at us?
Kindly ask your auntie!
See this superior variety
and fully ripe banana fruits.
Also look at this small utensil
containing ghee got from cow's milk.

"Where can I place them
inside this tiny cart?
If she knew the art of handling
such things of high variety
Would this blockhead blabber like this?
What would be the loss
If she had come on foot?" –
This was her uncle's answer.

**மருமகள் செயல் :**

மாமனார் கொண்டு வந்த
பொருளெல்லாம் வரிசை செய்து,
தீமையில் லாத வெந்நீர்
அண்டாவில் தேக்கி வைத்துத்
தூய்மைசேர் உணவு தந்து,
துப்பட்டி விரித்த மெத்தை
ஆம், அதில் அமரச் சொல்லிக்
கறிவாங்க அவள் நடந்தாள்.

கடையிலே செலவு செய்த
கணக்கினை எழுதி வைத்தாள்
இடையிலே மாமன் "விக்குள்
எடுத்தது தண்ணீர் கொஞ்சம்
கொடு" எனக் கொடுத்தாள். பின்னர்க்
கூடத்துப் பதுமை ஓடி
அடுக்களை அரங்கில், நெஞ்சம்
அசைந்திட ஆட லானாள்.

**என்ன கறி வாங்கலாம்?**

கொண்டவர்க் கெதுபி டிக்கும்
குழந்தைகள் எதைவி ரும்பும்
தண்டூன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன
உண்பதில் எவரு டம்புக்(கு)
எதுவுத வாதென் றெல்லாம்
கண்டனள், கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்.

## HER ACTIVITIES

After arranging all the things
which were brought in the cart
The daughter-in-law prepared
hot water for her uncle's bath.
She then served him dainty food,
spread a blanket on the mattress
And asked him to take seat on it.
Then set out for the purchase of groceries.

On her expenses in the shop
she wrote a detailed account.
Her uncle had hiccups
in the meanwhile
And hence she gave him water.
Again she went to the hall
And got herself busily engaged
in the kitchen.

## CHOICE OF VEGETABLES

"Which vegetables her husband would relish
and what is the taste of her kids?
Which would be the suitable dish
for her aged in-laws?
Which vegetable would be detrimental
to the health of the family members?"
These questions she raised unto herself
while choosing them for purchase.

**பிள்ளைகள் உள்ளம் எப்படி?**

*பொரியலோ பூனைக் கண்போல்*
*பொலிந்திடும் சுவைம ணக்கும்!*
*"அருந்துமா சிறிய பிள்ளை"*
*எனஎண்ணும் அவளின் நெஞ்சம்*
*இருந்தந்தச் சிறிய பிள்ளை*
*இச்சென்று சப்புக் கொட்ட*
*அருந்தியே மகிழ்ந்த தைப்போல்*
*அவள்காதில் ஓசை கேட்கும்!*

**அத்தானுக்கு எது பிடிக்கும்?**

*பொருளையும் பெரிதென் றெண்ணாள்,*
*பூண்வேண்டாள் தனைம ணந்தோன்*
*அருளையே உயிரென் றெண்ணும்*
*அன்பினாள் வறுத்தி றக்கும்*
*உருளைநற் கிழங்கில் தன்னை*
*உடையானுக் கிருக்கும் ஆசைத்*
*திருவுளம் எண்ணி எண்ணிச்*
*செவ்விள நகைசெய் கின்றாள்.*

**எதிர்கால நினைவுகள்:**

*இனிவாழும் நாள்நி னைத்தாள்;*
*இளையவர் மாமன் மாமி*
*நனிஇரங் கிடுதல் வேண்டும்*
*நானவர்க் கன்னை போல்வேன்*
*எனதத்தான் தனையும் பெற்று*
*வாழ்ந்தநாள் எண்ணும் போதில்*
*தனிக்கடன் உடையேன், நானோர்*
*தவழ்பிள்ளை அவர்கட் கென்றாள்.*

## TASTE OF HER KIDS

"The fried vegetables would look
        like the cat's eye and would emit flavour.
Would the youngest boy relish it?"
        she was a bit confused and not clear!
She imagined as if that kid
        openly exhibited its taste
By sucking its lip!
        She could even hear the sound!

## THE TASTE OF THE HUSBAND

Cost of the vegetables she didn't mind!
        Not enamoured of even ornaments!
His love she considered as her life!
        She knew her husband's preference
For the fully-fried potatoes!
        His taste of that tuber dish
She recalled again and again
        and even spilt a gentle smile.

## THOUGHTS OF HER FUTURE

She thought about her future,
        aged in-laws and younger brother-in-law.
"All their goodwill I should surely get!
        I should serve them as a mother!
If I recall the number of days
        I have lived with my husband
I'm just a child to this family –
        but highly indebted".

கிழங்கினை அளியச் செய்வாள்,
　　கீரையைக் கடைந்து வைப்பாள்;
கொழுங்காய்பச் சடியே வைப்பாள்,
　　கொல்லையின் முருங்கைக் காயை
ஒழுங்காகத் தோலைச் சீவிப்
　　பல்லில்லார் உதட்டால் மென்று
விழுங்கிடும் வகைமு டித்து
　　வேண்டிய எல்லாம் முடித்தே.

**முதியவருக்குத் துணை :**

தூங்கிய மாமன் ''அம்மா
　　தூக்கென்னை'' என்று சொல்ல,
ஏங்கியே ஓடி மாமன்
　　இருக்கின்ற நிலைமை கண்டு,
வீங்கிய காலைப் பார்த்தாள்
　　''எழுந்திட வேண்டாம்'' என்றாள்.
தாங்கியே மருந்து பூசிச்
　　சரிக்கட்டிப் படுக்க வைத்தாள்.

**அவளோர் மருத்துவச்சி :**

நாடியில் காய்ச்சல் என்றே
　　நன்மருந் துள்ளுக் கீந்தாள்
ஓடிநற் பாலை மொண்டு,
　　மறுவுலைக் கஞ்சி ஊற்றி,
வாடிய கிழவர்க் கீந்தாள்
　　மாமிக்கோ தலைநோக் காடாம்,
ஓடிடச் செய்தாள் மங்கை
　　ஒரேபற்றில் நொடிநே ரத்தில்.

She used to boil tuber as pap
to mash the greens into a pulp
And to make some pickle-like preparation.
She used to chisel the outer layer
Of the drum sticks grown in the backyard
and make very soft dish
So that the persons of toothless gums
can easily relish.

## ASSISTANCE TO THE AGED

As her uncle asked her to lift him
and assist to get up from bed
She hurried towards him
and saw his pathetic condition.
She found his legs swollen.
Asking him not to move
She applied some palliative medicine
and made him rest on the bed.

## THE ROLE OF A NURSE

Feeling temperature by just touching the pulse
suitable medicine she administered.
Preparing gruel out of rice
and adding milk to it
She offered it to her emaciated uncle.
When her mother-in-law
Suffered from severe head ache
she cured her with indigenous treatment.

**அள்ளி அணைத்தாள் பிள்ளைகளை :**

*குழந்தைகள் பள்ளி விட்டு*
*வந்தார்கள், குருவிக் கூட்டம்*
*இழந்தநல் லுரிமை தன்னை*
*எய்தியே மகிழ்வ தைப்போல்!*
*வழிந்தோடும் புதுவெள் ளத்தை*
*வரவேற்கும் உழவ ரைப்போல்,*
*எழுந்தோடி மக்கள் தம்மை*
*ஏந்தினாள் இருகை யாலும்!*

**உடை மாற்றினாள் :**

*பள்ளியில் அறிஞர் சொன்ன*
*பாடத்தின் வரிசை கேட்டு*
*வெள்ளிய உடை கழற்றி*
*வேறுடை அணியச் செய்தே,*
*உள்வீட்டில் பாட்டன் பாட்டி*
*உள்ளதை உணர்த்தி, அந்தக்*
*கள்ளினில் பிள்ளை வண்டு*
*களித்திடும் வண்ணம் செய்தாள்.*

**தலைவி சொன்ன புதுச்செய்தி :**

*அன்றைக்கு மணம்பு ரிந்த*
*அழகியோன் வீடு வந்தான்!*
*இன்றைக்கு மணம் புரிந்தாள்*
*எனும்படி நெஞ்சில் அன்பு*
*குன்றாத விழியால், அன்பன்*
*குளிர்விழி தன்னைக் கண்டாள்*
*''ஒன்றுண்டு சேதி'' என்றாள்*
*''உரை'' என்றான் ''அம்மா அப்பா*

## CHILDREN BACK HOME

Her children came back from school
like the flying sparrows
Enjoying their freedom when they are
just released from the cage.
Like the farmer who welcomes the overflowing flood
of water that flows in the river
Running towards them, she received
and caressed them with her arms.

## CHANGING THEIR DRESS

She curiously heard them narrate
the lessons which were taught.
Made them put off their white attire
and put on the fresh one.
Then broke the news to the kids
that their grand parents had come.
This news was like honey
that made those beetles hum in joy.

## HER REVELATION

Her husband also returned home
like a newly-wed bride-groom!
With boundless love and affection
that overwhelmed in his mind!
Her lustrous eyes met
her husband's affectionate ones!
"A news I've got" she said.
"Tell me please", he asked.

*''வந்தார்'' என் றுரைத்தாள். கேட்டு*
*''வாழிய'' என்று வாழ்த்தி,*
*''நொந்தார்கள்'' என்று கேட்டு*
*நோயுற்ற வகைய றிந்து,*
*தந்தைதாய் கண்டு ''உங்கள்*
*தள்ளாத பருவந் தன்னில்*
*நைந்திடும் வண்ணம் நீங்கள்*
*நடந்திட லாமா? மேலும்,*

**முதியோர்க்கு :**

*''ஒக்கநல் லிளமை கண்டீர்*
*கல்விநல் லோழுக்கம் கண்டீர்*
*மெய்க்காதல் மணமும் பெற்றீர்!*
*இல்லற வெற்றி பெற்றீர்!*
*மக்களைப் பெற்றீர்! வைய*
*வாழ்வெலாம் பெற்றீர்! என்னால்*
*எக்குறை பெற்றீர்? இன்னும்*
*ஏனிந்தத் தொல்லை ஏற்றீர்?*

*''அதிர்ந்திடும் இளமைப் போதில்*
*ஆவன அறங்கள் செய்து*
*முதிர்ந்திடும் பருவந் தன்னில்,*
*மக்கட்கு முடியைச் சூட்டி,*
*எதிர்ந்திடும் துன்ப மேதும்*
*இல்லாமல், மக்கள், பேரர்*
*வதிந்திடல் கண்டு, நெஞ்சு*
*மகிழ்வதே வாழ்வின் வீடு.''*

"Father and mother have come", she said.
He wished them good health.
Coming to know of their ailment
and also the reason for it
He approached them and said,
"You shouldn't have walked
Such a long distance
at this advanced age!

## HE SPEAKS TO HIS AGED PARENTS

"You had a good early life;
Had good education and character.
You both loved and got married.
Led a successful domestic life.
Gave birth to loving children.
Were blessed with all the fortunes of life.
Did you face any difficulty in life?
Then why did you undertake this ordeal?

"Performing all the possible deeds of *Aram*
during the early days of one's life,
Entrusting the children with responsibilities
when senility has set in,
Seeing the peaceful and contented life
of children and grand - children
And sharing their joy is the real heaven
and nothing else can be."

**அறிவுக்குத் திருவிளக்கு :**

என்றனன் தந்தை சொல்வார்
''என்னரும் மகனே, மெய்தான்.
ஒன்றிலும் கவலை கொள்ளேன்,
உன்னைநான் பெற்ற தாலே!
அன்றியும் உன்பெண் டாட்டி
அறிவுக்கோர் திருவி ளக்காம்!
இன்றுநான் அடைந்த நோய்க்கும்
நன்மருந் திட்டுக் காத்தாள்.

செல்லப்பா உணவு கொள்ளச்
சிறுவர்கள் தமையும் உண்ணச்
சொல்லப்பா'' எனவே, அன்பு
சொரிந்திடச் சொல்லி டுந்தன்
நல்லப்பா மகிழும் வண்ணம்
''நல்லதப் பா'' என் றோதி,
மெல்லப்பா வைபு ரிந்த
விருந்தினை அருந்த லுற்றான்.

**பிள்ளைக்கு அமுது :**

குழந்தைகள் உடனி ருந்து
கொஞ்சியே உண்ணுகின்றார்,
பழந்தமிழ்ப் பொருளை அள்ளிப்
படித்தவர் விழுங்கு தல்போல்!
ஒழுங்குறு கறிகள் தம்மில்
அவரவர் உளம றிந்து
வழங்கினாள் அள்ளி அள்ளி,
வழிந்திடும் அன்புள் ளத்தாள்.

(பின்னர் கணவனின் வேண்டுகோளுக்கிணங்க அவள் யாழெடுத்து, இனிய கவிதை பாடலுற்றாள். கணவன் இசையில் மெய்மறந்து இருந்த நேரத்தில்...)

## A LANTERN OF WISDOM

As the son told this, the father replied,
"O my son! What you tell is true!
I'm least bothered about anything
since I have given birth to you.
Apart from that, your wife remains
a burning lantern of wisdom.
Even today she cured my illness
by using her nursing prowess.

"Go and have your lunch
along with your kids"
As his father asked him so
with abundant love and affection,
The son reciprocated his love
and obeyed his words,
By enjoying the dainty dish
prepared by his beloved wife.

## FOOD FOR THE KIDS

All the children sat together
and took their food,
As if the scholars of Tamil eagerly study
the ancient and precious literature!
She, their beloved mother,
served the food prepared by her
Understanding their individual taste
and to their heart's content.

[Then at his request she played the lute and sang a chaste Tamil song. When the entire family was immersed in it she reminded him of his duty in the shop.]

**கடையை மறந்தீரோ?**

*இசையினில் தனைம றந்தே*
*இருந்ததன் கணவன் தன்னைக்*
*"கடையினை மறந்து விட்டீர்*
*கணக்கர் காத்திருப்பார்" என்று*
*நடையினில் அன்னம் சொன்னாள்.*
*நல்லதோர் நினைவு பெற்ற*
*உடைவன் "ஆம் ஆம்" என்றான்;*
*ஆயினும் "உம்உம்" என்றான்.*

**மனைவியிடம் பிச்சை கேட்டான் :**

*"கண்ணல்ல நீதான் சற்றே*
*கடைக்குப்போய்க் கணக்கர் தம்மை*
*உண்பதற் கனுப்பி, உண்டு*
*வந்தபின் வா என் னாசைப்*
*பெண்ணல்ல" என்று சொல்லிச்*
*சோம்பலால் பிச்சை கேட்டான்.*
*கண்ணல்ல, கருத்தும் போன்றாள்,*
*"சரி" என்று கடைக்குச் சென்றாள்.*

**கடையின் நடைமுறை :**

*மல்லியை அளப்பார்; கொம்பு*
*மஞ்சளை நிறுப்பார்; நெய்க்குச்*
*சொல்லிய விலைகு றைக்கச்*
*சொல்லுவார்; கொள்ச ரக்கின்*
*நல்லியல் தொகைகொ டுப்பார்;*
*சாதிக்காய் நறுக்கச் சொல்வார்;*
*வெல்லம்என் றொருகு ழந்தை*
*விரல்நீட்டும் கடைக்கு வந்தாள்.*

## HAVE YOU FORGOTTEN THE SHOP?

The husband was fully immersed
in her melodious Tamil music.
"Perhaps you have forgotten the shop,
employees there would be waiting for you" .
When the swan-gaited woman told thus,
he was reminded of his employees.
His mind wholly accepted her words,
but he exhibited some reluctance.

## BEGGED HIS WIFE

"Are you not precious like my eyes?
Go to the shop and send the employees
For their lunch and come home
after their return to the shop".
Goaded by the post-lunch laziness,
he begged his wife thus!
With heart seeing eye to eye with him
she set out to the shop.

## METHOD OF BUSINESS

Coriander would be measured and sold.
Turmeric powder has to be weighed.
The customers would usually ask
for a reduction in the price of ghee.
For cost price alone they would bargain!
Some goods the customers would ask to slice!
Children used to come there
and beg for a jaggery cake.

**அவள் வாணிபத் திறமை :**

*களிப்பாக்குக் கேட்பார்க் கீந்து*
*களிப்பாக்கிக் கடனாய்த் தந்த*
*புளிப்பாக்கி தீர்ந்த பின்பு*
*கடனாகப் புதுச்ச ரக்கை*
*அளிப்பார்க்குப் பணம்அ ளித்தாள்*
*அதன்பின்னர் கணக்கர் எல்லாம்*
*கிளிப்பேச்சுக் காரி யின்பால்*
*உணவுண்ணக் கேட்டுப் போனார்.*

*இளகிய நெஞ்சத் தாளை*
*இளகாத வெல்லம் கேட்பார்;*
*அளவாக இலாபம் ஏற்றி*
*அடக்கத்தை எடுத்து ரைப்பாள்!*
*மிளகுக்கு விலையும் கூறி*
*மேன்மையும் கூறிச் சற்றும்*
*புளுகாமல் புகன்ற வண்ணம்*
*புடைத்துத் தூற்றிக் கொடுப்பாள்.*

**கணவனிடம் கணக்கு ஒப்புவித்தாள் :**

*கொண்டவன் வந்தான் கண்கள்*
*குளிர்ந்திடக் கண்டாள் ''அத்தான்*
*கண்டுள்ள கணக்கின் வண்ணம்*
*சரக்குகள் கடன்தந் தார்க்குத்*
*தண்டலும் கொடுத்தேன் விற்று*
*முதலினைத் தனியே வைத்தேன்*
*உண்டங்கு வேலை'' என்றே*
*உரைத்தனள் வீடு சென்றாள்.*

## HER BUSINESS PROWESS

She sold betel-nut to those who asked for it
and made them satisfied.
After clearing the dues of tamarind purchase
she placed a fresh order
And advanced amount for that.
Then the employees of the shop
Sought the permission of that psittacine maid
and went for their lunch.

Soft-hearted she was! But her customers
asked for hard jaggery cake!
Usually she quoted a price
having in mind a moderate profit!
When quoting the price of pepper
she used to describe its high quality.
Never would she utter falsehood in business.
Unadulterated things alone she always sold.

## SUBMITTED ACCOUNTS TO HER HUSBAND

Her husband came to the shop and
she understood that he was pleased.
"Darling! I settled the dues
as per the accounts maintained.
The sale proceeds of today
I have separately kept.
Lot of work I've got in the home".
Saying so she went home.

**வீட்டறை மருத்துவமனை :**

*படுக்கையில் மாம னாரைப்*
*பார்த்தனள் ''காலில் இன்னும்*
*கடுக்கை தீர்ந்திலதோ'' என்று*
*கனிவோடு கேட்டு டுக்கும்*
*உடுக்கையும் மாற்று வித்து,*
*மட்டான உணவு தந்து*
*தடுக்கினி லிருந்து தூக்கிச்*
*சாய்வு நாற்காலி சேர்த்தாள்.*

**மற்றும் வீட்டு வேலை :**

*வரிசையாய்க் காய வைத்த*
*வடகத்தை, வற்றல் தன்னைப்*
*பெரிசான சாலில் சேர்த்தாள்.*
*பிணைந்துள்ள மாடு கன்றுக்(கு)*
*உரியநல் தீனி வைத்தாள்.*
*உறிவிளக் குகள்து டைத்தாள்.*
*வரும்மக்கள் எதிர்பார்த் திட்டாள்.*
*வந்தனர்: மகிழ்ச்சி பெற்றாள்.*

**கடற்கரையில் :**

*சிற்றுண வளித்தாள்; பின்பு*
*திரைகடற் கரையை நாடிப்*
*பெற்றதன் மக்கள் சூழப்*
*பெருவீதி ஓர மாகப்*
*பொற்கொடி படர்ந்தாள் தேனைப்*
*பொழிந்திடு பூக்க ளோடு!*
*வற்றாத வெள்ளக் காட்டின்*
*மணற்கரை ஓரம் வந்தாள்!*

## HOUSE – A NURSING HOME

She saw her father-in-law
in bed. "Perhaps the pain
In the legs is still causing concern"
Politely asking him so
She helped him change his dress.
Giving him moderate food
She made him get up and sit
on an arm-chair.

## OTHER HOUSEHOLD WORK

The seasoned and dried pulse
along with dried vegetables
She stored in a big utensil.
To the tethered cattle and calves
She provided proper cattle feed.
Then, after cleansing the lantern
Eagerly awaited the arrival
of her kids! Glad she was as they came home.

## IN THE SHORESIDE

Gave some light refreshments
and took them to the shore.
Those melliferous flowers
flocked around her
In a disciplined manner
on the safe side of the road.
Moved along the sandy shore
of the sea of boundless water!

**கடற்கரைக் காட்சி :**

அக்கரை செலும்உள் ளத்தை
அளாவிடக் கிடந்த வில்லும்
இக்கரை அலையின்ஆர்ப்பும்,
இவற்றிடைச் செவ்வா னத்தின்
மிக்கொளி மிதக்கும் மேனி
விரிபுனல் புரட்சிப் பாட்டும்,
''ஒக்கவே வாழ்க மக்கள்''
என்பதோர் ஒலியும் கேட்டாள்!

**காட்சி இன்பம் :**

குளிர்புனல் தெளிவி லெல்லாம்
ஒளிகுதி கொள்ளும் வெள்ளத்
துளிதொறும் உயிர்து டிக்கும்
தொன்மைசேர் கடல்இவ் வைய
வெளியெலாம் அரசு செய்யும்
விண்ணெலாம் ஒளியைச் செய்யும்
களியெலாம் காணக் காணக்
கருத்தெலாம் இன்பம் பொங்கும்!

**கடற்காற்று :**

கடலிடைப் புனலில் ஆடிக்
குளிரினிற் கனிந்த காற்றை
உடலிடைப் பூசு கின்ற
ஒலிகடற் கரையின் ஓரம்
அடர்சிற கன்னப் புட்கள்
அணிபோல அலைந டக்கும்
நடையொடு நடந்து வீடு
நண்ணினாள் மக்க ளோடு.

English Rendering - M.S.Venkatachalam

## SCENE OF THE SHORE

The numerous bow-shaped boats
attracting the attention of all,
The endless roar of the tides,
the dazzling red sky
Glittering on all the things there,
the sea's revolutionary song
Hailing the people of the world –
All these she saw and heard.

## THE GRANDEUR OF THE SCENE

The dazzling light of the evening sun
danced on the entire surface of the sea!
Every drop of water was busy and moving!
From the days beyond the human memory
The sea has ruled the entire space
and its blue colour the sky reflects!
As we gaze at the gleeful ocean
our minds will overwhelm with joy.

## THE SEA BREEZE

Bathing in the blue sea water
and taking the chillness of it
The sea breeze gently caressed
all those walking along the shore.
She came home from the beach
followed by her beloved kids
As if birds of soft feathers marched
in a parade following her foot steps!

**இரவுக்கு வரவேற்பு :**

மேற்றிசைக் கதிர்ப்ப ழத்தை
விருந்துண்டு, நீல ஆடை
மாற்றுடை யாய் உடுத்து,
மரகத அணிகள் பூண்டு,
கோற்கிளை ஒடுங்கும் புட்கள்
கோட்டிடும் இறகின் சந்தக்
காற்சிலம் பசையக் காதற்
கரும்பான இரவு தன்னை

திருவிளக் கேந்தி வந்து
தெருவினில் வரவேற் கின்றாள்.
உருவிளக் கிடவீட் டுக்குள்
ஒளிவிளக் கனைத்தும் ஏற்றி
ஒருபெருங் கலயத் துள்ளே
உயர்நறும் புகை எழுப்பிப்
பெரியோரின் உள்ளம் எங்கும்
பெருகல்போல் பெருகச் செய்தாள்.

**அத்தானை எதிர்பார்க்கின்றாள் :**

கட்டுக்குள் அடங்கா தாடிக்
களித்திடும் தனது செல்வச்
சிட்டுக்கள், சுவடிக் குள்ளே
செந்தமிழ்த் தீனி உண்ண
விட்டுப்பின் அடுக்க ளைக்குள்
அமுதத்தை விளைவு செய்தாள்
எட்டுக்கு மணிஅ டிக்க
அத்தானை எதிர்பார்க் கின்றாள்.

English Rendering - M.S.Venkatachalam

## WELCOME TO THE NIGHT

After the West tasted the feast
of the fruit of the setting sun,
After wearing a fresh blue attire
and ornaments studded with gems,
The night very sweet for lovers emerged,
causing the sound of anklets
When birds of varied feathers
chirped and entered the nests!

Coming to the street with a lantern lit,
she received the sweet night!
Then made all the lamps bright
so that everything was visible to the eyes!
Pouring aromatic substance on the fire
prepared in a large container
She made sweet smoke pervade everywhere
like the love of broad-minded men.

## EAGERLY AWAITS HER HUSBAND

Their sparrow-like beloved kids
gleefully played and enjoyed the freedom
Of the evening and then began to taste
the sweet dish of chaste Tamil.
Then she entered the kitchen
and prepared a delicious dinner.
When the clock stroke eight
she eagerly awaited her husband.

**கட்டில் அழகு :**

*சரக்கொன்றை தொங்கவிட்ட பந்த லின்கீழ்த்*
*தனிச்சிங்கக் கால்நான்கு தாங்கும் கட்டில்*
*இருக்கின்ற மெத்தைதலை யணைகள் தட்டி*
*இருவீதி மணமடிக்கும் சந்த னத்தைக்*
*கரைக்கின்ற கலையத்துட் கரைத்துத் தென்றல்*
*கலக்கின்ற சன்னலினைத் திறந்து, நெஞ்சில்*
*சுரக்கின்ற அன்பினால் தெருவில் மீண்டும்*
*துடிக்கின்றாள் கணவனது வரவு பார்த்தே!*

**அவன் மலை போன்ற செல்வம் :**

*பறக்கின்ற கருங்குயிலாள் மீண்டும் வீட்டில்*
*பழக்குலையைத் தட்டத்தில் அடுக்கிப் பாலைச்*
*சிறக்கின்ற செம்பினிலே ஊற்றி வைத்துச்*
*சிரிக்கின்ற முல்லையினைக் கண்ணி யாக்கி,*
*நிறக்கின்ற மணிவிளக்கைச் சிறிது செய்து*
*நினைக்கின்ற இன்பத்தை நெஞ்ச வீட்டில்*
*மறைக்கின்ற படிமறைத்து மற்றும் சென்று*
*மலைபோன்ற செல்வத்தின் வரவு பார்த்தாள்.*

**பிள்ளைகட்குப் பரிசு :**

*கால்ஒடிந்து போகுமுன்னே அவனும் வந்தான்.*
*கதையொன்று கேட்டாயா? எனவுட் கார்ந்தான்.*
*மேலிருந்து ''பிள்ளைவளர்ப் புப்போ ட்டிக்கு*
*விடைவந்து சேர்ந்த'' தென்றான்; எவ்வா றென்றாள்.*
*''ஆல்ஒடிந்து வீழ்ந்தாலும் தோள்கள் தாங்கும்*
*அப்படிநாம் பிள்ளைகளை வளர்த்த தாலே.*
*பாலோடுசர்க் கரைகலந்த இனிய சொல்லாய்*
*பரிசுநமக் குத்தந்தார் பாராய்'' என்றான்.*

## THE MARVEL OF THE COT

Under the hanging garland of *konrai* flowers
the cot rested on four lion-shaped legs!
On it she spread the mattress and laid pillows
after removing dust from them.
Prepared sweet-smelling sandal paste,
opened the window to let in the breeze
And eagerly looked at the street again
expecting the arrival of her husband.

## HER TREASURE-LIKE HUSBAND

That cuckoo-voiced damsel placed
a bunch of fruits on a plate,
Kept hot milk in a small utensil,
wove a slender garland of jasmine buds,
Made the burning lamp somewhat dim,
kept her feelings of joy under control
And again went to the street and looked
whether her treasure-like husband emerged.

## AWARD TO THE KIDS

He came there ere her legs lost their stamina.
"Do you know the news?" he asked and sat.
"In the child-rearing contest, the result
has come" he said. She enquired about it.
"Just as props that shoulder the banyan tree
we have reared our kids and hence
We've bagged the award! Sweet is the news
like mixing sugar in the milk," he said.

### பழங்காலக் கிழங்கள் :

*அறையினிலே படுத்திருந்த பெற்றோர் காதில்*
*அதைப்போடத் துவக்கினாள். "வளர்ப்புப் போட்டி*
*அறியோமே எம்நாளில்" என்றார் பெற்றோர்.*
*அப்படிஎன் றாலின்ன தெனவி ளக்கிக்*
*"குறைவின்றி வளர்ப்பவர்கள் பரிசு கொள்ளல்"*
*கூறினான். "குழந்தைகளை விசாரித் துத்தான்*
*அறிந்தாரோ?" எனக்கேட்டார் அக்கா லத்தார்.*
*அதன்விரிவும் கூறியபின் மகிழ்வு கொண்டார்.*

### அடுக்களையிற் பிள்ளைகள் :

*பரிசுதனைப் பெற்றபிள்ளை, ஓடி வந்தான்;*
*பலருமே சூழ்ந்தார்கள். குருவிக் கூட்டம்*
*பெரிசாக, இன்மொழிகள் செவிபி ளக்கப்*
*பெருமானும் பெருமாட்டி தானும், அதன்பின்*
*அரசாட்சி செலுத்தியபின், எல்லா ரும்போய்*
*அடுக்களையிற் கூடாரம் அடித்து விட்டார்!*
*ஒருபெரும்போர்க் களம்புகுந்தார். உணவைத் தூக்கி*
*ஓடிப்போ டா, என்றார். "பசி" பறந்தான்.*

### குழந்தைகள் தூங்கியபின் :

*அவன்பாடிக் கொண்டிருந்தான் அறைவீட் டுக்குள்.*
*அருமையுள்ள மாமனார் மாமி யார்க்கும்,*
*உவந்தருள உணவிட்டுக் கடன்மு டித்தாள்.*
*உட்பக்கத் தறைநோக்கி அவரும் போனார்.*
*குவிந்திருக்கும் சுவையுணவு தானும் உண்டாள்;*
*கொக்கரிக்கும் நெஞ்சுக்குத் துணிவு கூறி,*
*அவிழ்ந்து வரும் நிலாஒளியால் இதழ்கள் மூடும்*
*அல்லிப்பூ விழிகள்குழந் தைகளும் மூட.*

## PERSONS OF THE PAST GENERATION

When this news reached the ears
of his aged parents resting inside,
"We haven't heard of such a contest
in our days," they said. He explained
"Those who rear their kids in a splendid manner
are given the award!"
"Do they consult the kids for deciding the award?"
they asked. His explanation made them glad.

## IN THE KITCHEN

The award-winning boy came there running.
All surrounded him like sparrows!
After the exchange of pleasantries in loud voice,
the old man and woman were pleased
And it was a realm of love and rejoice!
They all assembled in the kitchen.
The dinner was altogether a battle-field
in which "appetite" was fully routed!

## AFTER THE CHILDREN RETIRED TO BED

Inside his room, he was humming a song.
She completed serving food
To her father-in-law and mother-in-law.
They retired to their private room.
She then took her delicious dinner.
Vexed at the outset, she consoled herself!
The light of the moon makes the petals of lilies close!
Likewise did the eye-lids of her lids!

**கதவைத் தாழிட்டாள்:**

*கண்டுபடுக் கைதிருத்தி உடைதி ருத்திக்*
*காற்றில்லாப் போதினிலே விசிறி வீசி,*
*வண்டுவழி திறக்குமொரு குழந்தை, "தண்ணீர்*
*வை" என்னும்; ஒன்றுதலை தூக்கிப் பார்க்கும்;*
*பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக் கெல்லாம்*
*பணிக்கையிடல் போல்அனைத்தும் தணிக்கை செய்தே*
*ஒண்பசு, நற் கன்றுக்கு வைக்கோல் ஈந்தே*
*உட்கதவு, வெளிக்கதவின் தாழ்அ டைத்தாள்.*

**கட்டிலண்டை மங்கை:**

*தொண்டையினில் ஒன்றுமே அடைக்க வில்லை;*
*துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்க லுற்றான்;*
*அண்டையிலே மங்கைபோய் "அத்தான்" என்றாள்;*
*அத்தானா தூங்கிடுவான்? "உட்கார்" என்றான்.*
*திண்தோளில் சந்தனத்தைப் பூசு கின்றாள்;*
*சேயிழைக்கு முல்லைமலர் சூட்டு கின்றான்.*
*கண்டான்!கண் டாள்! "உவப்பின் நடுவி லேஓர்*
*கசப்பான சேதியுண்டு கேட்பீர்" என்றாள்!*

**பொதுத்தொண்டு செய்தோமா?**

*"மிதிபாகற் காய்கசக்கும்; எனினும், அந்த*
*மேற்கசப்பின் உள்ளேயும் சுவைஇ ருக்கும்;*
*அதுபோலத் தானேடி! அதனா லென்ன?*
*அறிவிப்பாய் இளமானே" என்றான் அன்பன்;*
*"அதிகாலை தொடங்கிநாம் இரவு மட்டும்*
*அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்,*
*இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன செய்தோம்?*
*என்பதைநாம் நினைத்துப்பார்ப் பதுவு மில்லை.*

## BOLTED THE DOOR

When she arranged the bed and adjusted her dress
and waved the fan when it was sultry,
A child would open its eyes and ask for water
and another would lift its head and look..
As if scholars patched up all the deficiencies
she verified whether everything was complete.
Provided hay stack for the cow and the calf
and bolted the front and back door.

## THE MAID NEAR THE COT

There was no hindrance in the throat!
Yet he caused the sound of a bleating goat!
The maid went near him and called, "Darling!"
Would he sleep? Said, "Be seated!"
Sandal paste she applied on his chest and arms!
Her locks he adorned with jasmine buds.
Both gazed at each other! In the meantime
"A bitter news I've" she said.

## HAVE WE RENDERED ANY PUBLIC SERVICE?

"Bitter gourd would of course be bitter –
but there is a taste inside its outer layer!
Life is like that! What if, there is bitterness?
Tell me my love!" he implored.
"From the early morning till late in night
excepting striving hard for our welfare
What public service have we rendered till now?
We don't even think of it

**வீட்டுத் தொண்டா பொதுத் தொண்டு?**

*''இன்றைக்குக் கறிஎன்ன? செலவு யாது?*
*ஏகாலி வந்தானா? வேலைக் காரி*
*சென்றாளா? கொழுக்கட்டை செய்ய லாமா?*
*செந்தாழை வாங்குவமா? கடைச் சரக்கை*
*ஒன்றுக்கு மூன்றாக விற்ப தெந்நாள்?*
*உன்மீதில் எனக்காசை பொய்யா? மாடு*
*குன்றுநிகர் குடம்நிறையக் கறப்ப துண்டா?*
*கொடுக்கலென்ன? வாங்கலென்ன? இவைதாம் கண்டோம்.*

**தன்னலத்தால் என்ன நடக்கும் :**

*''தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்;*
*தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்;*
*எமதென்று சொல்கின்றோம் நாடோ றுந்தான்;*
*எப்போது தமிழினுக்குக் கையா லான*
*நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?*
*நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்,*
*அமைவாகக் குந்திநினைத் தோமா? இல்லை;*
*அனைவருமிவ் வாறிருந்தால் எதுந டக்கும்?''*

**பெரும்படியான தொண்டு செய்துள்ளோம் :**

*கரும்படியின் சாறுநிகர் மொழியாள் இந்தக்*
*கனிந்தமொழி சொன்னவுடன் அவன்உ ரைப்பான்:*
*''வரும்படிவி தப்படிநான் தரும்ப டிக்கு*
*வாக்களித்த படிகணக்கர் திங்கள் தோறும்*
*கரம்படிவி தித்தமிழர் கழகத் தார்கள்*
*கடைப்படியை மிதித்தவுடன் எண்ணி வைப்பார்.*
*பெரும்படியாய்ச் செய்ததுண்டு; படிக்க ணக்கைப்*
*பேசிவிட்டாய் கண்டபடி'' என்று சொல்ல.*

## IS IT A PUBLIC LIFE?

"What is the menu today? How much have we spent?
Did the servant come? Has the maid servant
Gone home? Shall we make *Kozhukattai?*
Shall we purchase a red screw-pine flower?
How to make a huge profit in business?
Is my love towards you a mere pretention?
Would our cow yield plenty of milk? What about
Our profit and loss? About these alone we're bothered!

[Kozhukattai is a variety of fast food which is said to be a favourite to Lord Vinayaga]

## THE RESULT OF SELFISHNESS

"We proudly claim to be Tamils
and aspire for the advancement of our land.
Patriotic spirit we claim to possess!
But did we spend even a pie
For the sake of our Tamil brethren?
Did we ever ponder over it,
At least once in our life? Never!
Then what would be the outcome?"

## DONE A LOT

When she with voice sweet as sugar-cane juice
told this, her husband replied
"I've asked my accountants to part with
a portion our income every month
To the public cause! So, as soon as the members
of Tamil Association set in their feet
In the shop, they would be paid. Without
knowing this you have made a brutal assault!"

**தமிழ் படிக்கவேண்டும் எல்லோரும் :**

''அப்படியா! அறியாத படியால் சொன்னேன்;
அந்தமிழர் படிப்படியாய் முன்னேற் றத்தை
எப்படியா யினும்பெற்று விட்டால் மக்கள்
இப்படியே கீழ்ப்படியில் இரார்க ளன்றோ?
மெய்ப்படிநம் மறிஞரின்சொற் படிந டந்தால்,
மேற்படியார் செப்படி வித்தை பறக்கும்.
முற்படில் ஆகாததுண்டா? எப்ப டிக்கும்
முதற்படியாய்த் தமிழ்படிக்க வேண்டும்'' என்றாள்.

**தமிழ்நாடு தலைதூக்க உயிரையும் தருவேன் :**

''இழந்தபழம் புகழ்மீள வேண்டும் நாட்டில்,
எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்.
வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்
மாற்றவர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்.
விழுந்ததமிழ் நாடுதலை தூக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்'' என்றான்.
''பழம்இடுவேன் சர்க்கரைப்பால் வார்ப்பேன் உங்கள்
பண்பாடும் வாய்திறப்பீர் அத்தான்'' என்றாள்.

**அன்றன்று புதுமை :**

''அன்றிலடி நாமிருவர்; பழமும் பாலும்
ஆருக்கு வேண்டுமடி! என்றன் ஆசைக்
குன்றத்திற் படர்ந்தமலர்க் கொடியே, மண்ணில்
குவிந்திருக்கும் சுவையுள்ள பொருள்கள் எல்லாம்
ஒன்றொன்றும் மறுநாளே பழமை கொள்ளும்!
ஒன்றொன்றும் சிலநாளில் தெவிட்டிப் போகும்!
அன்றன்று புதுமையடி தெவிட்ட லுண்டோ
ஆருயிரே நீகொடுக்கும் இன்பம்?'' என்றான்.

## EVERYONE SHOULD LEARN TAMIL

"Is it so? Without knowing this, I've said so!
If our Tamils make steady progress
Overcoming all the existing hurdles
won't they rise up from the present level?
If we follow the advice of our eminent men
can't we shatter the tactics of our foes?
If we ventured, will we ever fail?
But study of Tamil is most important", she said.

## I WILL LAY DOWN MY LIFE

"With the hoary heritage, our land should again flourish!
The identity of our clan we should preserve!
Tamil should pervade all the spheres of our life!
Existing frustration should be gone for ever!
For our fallen Tamil land to surge again
I'm prepared to lay down my life!" he said.
"Please open your mouth, darling! In it I want
To put sweet fruit and sugared milk", she said,

## EVER FRESH

"We're like *Anril* birds! Don't need milk and fruits!
O the tender creeper that has grown
On the hefty mountain of my love!
All the things that are sweet in the world
Would become rotten the very next day
or would become saturated soon!
Is not your love sweet and fresh
that lasts for ever?" he answered.

**இரவுக்கு வழியனுப்பு விழா :**

*நள்ளிரவின் அமைதியிலே மணிவி ளக்கும்*
*நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல்*
*மெல்லஉடல் குளிரும்வகை வீசா நிற்கும்*
*வீணையில்லை காதினிலே இனிமை சேர்க்கும்!*
*செல்லரிதாய், இனிதினிதாய் நாழி கைபோம்!*
*சுடர்விழிகள் ஈரிரண்டு, நான்கு பூக்கள்,*
*புல்லிதற் போய்ஒடுங்கும் தமைம றந்து*
*பூரிப்பார் நலம்பாடி இரவு செல்லும்.*

**முற்றும்**

English Rendering - M.S.Venkatachalam

## SEND-OFF TO THE NIGHT

Through the window the breeze entered in the night
without disturbing the flickering lamp
And gently caressed the persons there!
Even without a lute, it caused a dulcet note!
Slowly the time passed – but it was sweet!
Two pairs of bright eyes and soft lips
Were buried in each other! Blissful they were
forgetting themselves! The night made its exit.

**THE END**

# இருண்ட வீடு

## 1

**சோம்பல் குடிகொண்ட வீடு :**

*கடலின் மீது கதிரவன் தோன்றிப்,*
*படரும் கதிர்க்கை பாய்ச்சிச் சன்னலின்*
*வழியே, கட்டிலில் மங்கையை எழுப்பினான்,*
*விழிதிறந்து மங்கை, மீண்டும் துயின்றாள்,*

✿ ✿ ✿

*அப்பொழுது மணியும் ஆறரை ஆனதால்*
*எப்பொழு தும்போல் இரிசன் என்ற*
*மாடு கறப்பவன் வந்து கறந்து*
*பாலொடு செம்பை, மூலையில் கட்டிய*
*உறியில் வைக்காது - உரலின் அண்டையில்*
*வைத்துப் போனான்; மங்கையின் கணவனோ,*
*சொத்தைப் பல்லைச் சுரண்டிய படியே*
*சாய்வுநாற் காலியில் சாய்ந்தி ருந்தான்.*

English Rendering - M.S.Venkatachalam

# A DISMAL HOUSE

1

## SLEEPING SPOUSE AND SLUMBERSOME HUSBAND

The sun emerged in the horizon,
Sent its arms of rays through the window
And woke up the maid sleeping on the cot!
She opened her eyes; but again fell asleep!

✿ ✿ ✿

Since it was six thirty in the morn
The cowherd Irusappan came
And milched the cow as usual.
But, instead of keeping the metal pot
Of milk in the hoop, he kept it
Near the pounding stone.
Her husband, seated on an arm-chair
Was brushing his carious teeth!

## 2

*தாயோ துயில்வதால் தனிமை பொறாமல்*
*நோயுடன் குழந்தை நூறு தடவை*
*அம்மா என்றும் அப்பா என்றும்*
*கம்மிய தொண்டையால் கத்திக் கிடந்தது!*

✿ ✿ ✿

*பெரிய பையன் பிட்டையும் வடையையும்*
*கருதி, முதலில் கையால் சாம்பலைத்*
*தொட்டுப் பல்லையும் தொட்டே, உரலின்*
*அருகில் இருந்த பால் செம்பை, விரைவில்*
*தூக்கி, முகத்தைச் சுருக்காய்க் கழுவினான்;*
*பாக்கி இருப்பது பால்என் றறிந்து*
*கடிது சென்றே ''இடையன் இப்படிச்*
*செம்பின் பாலைச் சிந்தினான்'' என்று*
*நம்பும் படியே நவின்றான் தந்தைபால்!*
*தந்தையார் ''நாளைக் கந்த இடையன்*
*வந்தால் உதைப்பதாய்'' வாய்மலர்ந் தருளினார்.*

## 3

**பற்கள் காணவில்லை :**

*பிட்டுக் காரி தட்டினாள் கதவையே.*
*திட்டென்ற கதவைத் திறந்தான் பெரியவன்.*
*பிட்டையும் வடையையும் தட்டில் வாங்கினான்.*
*பெட்டி மீதில் இட்டுட் கார்ந்தான்.*
*ஆவலாய் அவற்றை அருந்தத் தொடங்கினான்*
*நாவில் இடுகையில், நடுவயிறு வலித்தது.*

2

## ALL IN PELL-MELL

As the mother was still sleeping
The sickly child felt lonely
And cried "Mummy" and "Daddy"
A hundred times in a choking voice!

✿ ✿ ✿

The eldest boy was enamoured
Of the dainty breakfast and so simply touched
The ash and "brushed" his teeth!
Then, taking the milk-containing metal pot
He hastily "washed" his face!
Seeing some milk still in the pot
He quickly went to his father and said,
"The cow-herd has spilt the milk like this!"
Such a lie, he tactfully uttered!
The irate father trusted him and vowed,
To kick that 'scoundrel' the next day!

3

## MISSING TEETH

The supplier of breakfast knocked at the door;
The eldest boy hastened and opened it.
Received the pancake and pudding in a plate.
Then, seated himself on a tin box
He began to anxiously eat it!
When he put a slice in his mouth, he felt

*வெளிக்குப் போக வேண்டுமென் றுணர்ந்தான்,*
*வடையின் சுவையோ விடேன் விடேன் என்றது.*
*கொல்லை நோக்கிச் செல்லவும் துடித்தான்.*
*மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்.*
*வில்லம்பு போல மிக விரை வாக*
*நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்*
*படபட வென்று பானையைத் தள்ளிக்*
*கன்றின் கயிற்றால் கால்தடுக் குற்று*
*நின்ற பசுவின் நெற்றியில் மோதி*
*இரண்டு பற்களை எங்கேயோ போட்டுப்*
*புரண்டெழுந் தோடிப் போனான் கொல்லைக்கு!*

4

**அவளது காலைத் தோற்றம் :**

*நாயின் அலறல் நற்பசுக் கதறல்*
*பானையின் படபடா, பையனின் ஐயோ -*
*இத்தனை முழக்கில் ஏந்திழை புரண்டு*
*பொத்தல் மரத்தின் புழுபோல் நெளிந்தே*
*எழுந்தாள். அவளோ, பிழிந்து போட்ட*
*கருப்பஞ் சக்கையின் கற்றைபோல் இருந்தாள்.*
*இதுதான் பாதை எனும் உணர்வின்றி*
*மெதுவாய் அறையினின்று வெளியில் வந்தாள்.*
*பாதி திறந்த கோதையின் விழியோ*
*பலகறை நடுவில் பதிந்த கோடுபோல்*
*தோன்றிற்று! மங்கை தூக்கம் நீங்காது,*
*ஊன்றும் அடிகள் ஓய்ந்து தள்ளாடினாள்.*
*உடைந்த பெட்டிமேல் கிடந்த பிட்டைத்*
*தொடர்ந்து நாய் தின்பதும் தோன்றவில்லை!*
*நடந்து சென்றவள் நற்பசு வுக்கெதிர்*
*கிடந்த சாணியைக் கிளறி எடுத்து*
*மீந்தபாற் செம்பில் விழுந்து கரைத்துச்*
*சாய்ந்து விடாமல் தாழைத் திறந்து*
*தெருவின் குறட்டில் தெளிந்தாள்! அவள்குழல்*

A pain in his stomach! A call of nature!
The taste of pancake was much absorbing!
Yet, an urgency to go to the toilet!
Tried to swallow the cake, which was half way!
Ran like an arrow from the bow
Trampling a dog on the way
And rolling some pots in haste!
As the calf-tethered rope made him falter
He dashed against the cow's forehead
And entered the toilet
After losing two of his teeth!

4

## THE HOUSE-WIFE'S MORNING APPEARANCE!

The barking dog, the bellowing cow,
The sound of mud pots, the alarm of the boy –
In this melee, the housewife lazily got up
And wriggled out like a worm!
She was like an abandoned bundle
Of the squeezed sugar-cane refuse!
Even without clearly knowing the exit
With slow steps she came out of her room.
The half-opened eyes of that maid
Looked like a thin line of a coin!
Still she was only half awake
And walked with staggering steps.
The pudding abandoned on the box
The dog was tasting! But she didn't notice it!
Then she crossed the tethered cow
Took the cow dung on her palms
Mixed it with the remaining milk of the pot
And sprinkled it at the entrance.

முள்ளம் பன்றி முழுதுடல் சிலிர்த்தல் போல்
மேலெழுந்து நின்று விரிந்து கிடந்தது!
வாலிழந்து போன மந்தி முகத்தாள்
கோல மிடவும் குனிந்தாள்; தாமரை
போல எழுதப் போட்ட திட்டம்
சிறிது தவறவே தேய்ந்த துடைப்பம்
அவிழ்ந்து சிதறுமே, அப்படி முடிந்தது!
பொன்னிறக் கதிரொடு போந்த பகலவன்,
இந்நில மக்கள்பால் தன்விழி செலுத்தினான்!
கோலம் போட்டவள் கொஞ்சம் நிமிர்ந்தாள்!
காலைப் பரிதியின் கண்கள் நடுங்கின!

5

**பையனுக்கு மருத்துவம், சாணி ஒத்தடம் :**

குறட்டி னின்று கோதை, உட்சென்று
கணவனின் எதிர் வந்து கையோய்ந்து குந்தினாள்.

✿ ✿ ✿

காலையில் புதுப்பேச்சுக் காண லாயினார் :
தன்னரு மனைவியைப் பொன்னிகர் கணவன்
''என்ன மணியடி?'' என்று கேட்டான்.
''சண்டிமணிப் பொறிக்குச் சாவி கொடுக்க
அண்டை வீட்டானை அன்றே அழைத்தேன்,
வரவே இல்லை மாமா'' என்றாள்.
அந்த நேரம் அண்டை வீட்டுக்
கந்தன், குடையும் காலிற் செருப்புமாய்
வீட்டி னின்று வெளியிற் செல்வதைப்
பார்த்த கணவன் ''பாரடி அவனை,
அதற்குள் வேலை அனைத்தும் முடித்துக்
கடைக்குச் செல்லும் கருத்தை'' என்றான்.
''விடியா மூஞ்சி விடியு முன்பே
போனால் நீயும் போக வேண்டுமா''
என்று கூறி இளிக்க லானாள்.

Dishevelled was her locks and it looked
Like the body of an irate porcupine!
With face looking like a chimpanzee
She bent to draw a *kolam.*
Though she tried to draw a lotus flower,
Just a slip made the powder smear everywhere!
It was like the scattered straws of a broom!
The sun who emerged with his golden rays
Gazed at the people of the world.
When from the *kolam*, she lifted her head
The eyes of the sun simply shivered!

5

## AN INDIGENOUS TREATMENT

From the entrance the maid went inside
And out of fatigue, sat by her husband's side.

✿ ✿ ✿

They began to discuss a new subject:
The gold-like husband asked
His beloved wife, "What is the time now?"
"To wind up our useless clock
I sent for our neighbour some days back!
But he didn't turn up!" she complained!
By that time, Kandan, their neighbour
Stirred out of his house
With an umbrella and wearing his sandals.
On seeing him the husband said,
"See, how smart that fellow is!
Going to the shop at this early hour!"
"A person with whom nothing prospers!
He goes before day-break! Should you
Also do so?" she asked and laughed!

பெரிய பையன் அருகில் வந்தான்
வடையும் கையும் வாயும் புண்ணுமாய்.
நடைமெலிந் தேஅவன் நண்ணுதல் கண்டே
என்ன என்ன என்று கேட்டாள் தாய்.
புன்னை அரும்புபோல் புதிதாய் முளைத்த
இரண்டு பற்கள் இல்லை என் றுரைத்தான்.
வீங்கிய உதட்டுநோய் தாங்கிலேன் என்றான்.
''உருண்டைச் சாணியை ஒருமுறை பூசினால்
மறுநொடி ஆறு''மென்று மங்கை மருத்துவ
மறைநூல் வகுத்த வண்ணம் கூறினாள்.
''பிறகா கட்டும் பிட்டைத் தின்பாய்
வேலைக் காரி விடிந்தபின் வருவாள்
பாலைக் காச்சிப் பருகலாம்'' என்பாள்.
எட்டரை அடிக்கையில் இப்படிச் சொன்னாள்.

௬

**புதிய பிட்டை உண்ணப் பையன் உதடு இடந்தரவில்லை**

அழுமுஞ்சி பிட்டை அணுகினான். நாயும்
நழுவிற்றுப் பிட்டை நன்று தின்று!
தொட்டுச் சுவைக்கப் பிட்டில் லாமையால்
பெரிய பையன் சிறிய நரிபோல்
ஊழ் ஊழ் என்றே ஊளையிட் டிருந்தான்.

✿ ✿ ✿

Their elder boy came near them
With a pancake and injured lips!
On noticing his faltering gait
His mother asked, "What happened?"
"Two of my teeth resembling jasmine buds
Are missing! The pain of my lips
Is intolerable!" he complained.
"If cow dung was applied on the wound
It would heal within a second!" –
Thus she exhibited her knowledge of medical science!
"Let us do it afterwards! But, now eat
The pudding. The servant maid would come
After dawn! We can then take boiled milk!"
She said so, by half past eight in the morn!

6

## THE ELDER BOY'S SWOLLEN LIPS

The ever-crying boy went near the pudding.
The dog had already eaten it and gone!
Since he had no pudding left
The elder boy started to hour
Repeatedly like a jackal!

✿ ✿ ✿

வீடு பெருக்கும் வேம்பு வந்தாள்!
சமையல் செய்யும் சங்கிலி வந்தாள்!
கடைக்கென் றமைந்த கணக்கன் வந்தான்!
கூடத்து நடுவில் ஏடு விரித்தே
மறுபடி வாங்கிய வடையையும் பிட்டையும்
சங்கிலி படைத்தாள், தலைவருக் காகவே!
பல்லைச் சுரண்டுவோர் பார்த்தார் அதனை.
மெல்ல எழுந்தார், மெல்ல நடந்தார்,
காலைக் கடனைக் கழிக்கக் கருதினார்.

✿ ✿ ✿

பிட்டையும் வடையையும், பெட்டியில் குந்திக்
கிட்ட இழுத்தான் கிழிந்தவாய்ப் பெரியவன்.
அவனுடல் கொஞ்சம் அசைந்தது. வாய்எயிறு
கவலை மாட்டின் கழுத்துப் போல
வீங்கி இருந்ததால் வெடுக்கென வலித்தது!
தாங்காது கையால் தடவிப் பார்த்தான்!
நோயையும் பெரியவன் நோக்க வில்லை!
வாயில் நுழைய வடைக்கு வழியில்லை!

7

**பிள்ளைக்கு வாயில்லை :**

வீட்டின் தலைவி நீட்டிய காலும்
ஆட்டின் கத்தல்போல் அருமைப் பாட்டுமாய்க்
குழந்தையை வைத்துக் குந்தி யிருந்தாள்.
இழந்த உயிரில் இம்மி யளவு
பிள்ளையின் உடலொடு பிணைந்தி ருந்ததால்
வள்ளிக் கொடியும் வதங்கிய தைப்போல்
தாய்மேற் பிள்ளை சாய்ந்து கிடந்தது.



✿ ✿ ✿

The sweeper woman Vembu came.
The maid cook Sangili came later on.
The accountant of the shop also came.
In the middle of the hall, Sangili spread
A paper and on it placed the breakfast
Newly purchased, specially for her master!
While scratching the teeth he saw it,
Slowly got up and gently walked
Towards the toilet, to answer the call of nature!

✿ ✿ ✿

Seated on the box, the boy drew the plate
Of pancake and pudding near him.
His body moved a bit! His mouth and gums
Were swollen like the hooves of oxen!
So he had an unbearable pain!
The swollen lips he touched with his palm!

7

## THE PATHETIC CONDITION OF THE CHILD

The mistress of the house sat extending her legs.
With lullaby that sounded like the bleat of a goat
She held the child in her arms!
Since the life was still lingering
In the body of that emaciated child,
It was resting on her shoulders
Like a tender tuber creeper!

✿ ✿ ✿

தாயோ சங்கிலி தன்னை அழைத்து
''வாங்கி வந்த வடையையும் பிட்டையும்
கொண்டுவா பசியடி குழந்தைக்'' கென்றாள்.
தட்டில் வடையும் பிட்டும் கொண்டு
சட்டென வைத்தாள் சங்கிலி என்பவள்.

கூடத்து நடுவில் ஏடு விரித்து
வைத்த பிட்டையும் வடையையும், வந்து
மொய்த்த ஈயொடு முதல்வர் தின்றார்!
மறுபடி ஒருபிடி வாயில் வைக்குமுன்
சிறுபடி அளவில் திடுக்கென உமிழ்ந்தார்.
அதனால் அதை அவர் அருந்துதல் நீங்கி
கையினால் ''வேண்டாம் வடை'' என்று காட்டினார்.

பெரிய பையன் பிசைந்தான் பிட்டை!
ஒரு துளிகூட உண்ணமாட் டாமல்
''கொரகொர கொழகொழ கொணகொண'' என்றான்.
இதன்மொழி பெயர்ப் பென்ன என்றால்
''எயிறு வீங்கி இடத்தை மறித்தது
தின்பதற் கென்ன செய்வேன்?'' என்பதாம்.

பையனால் இப்படிப் பகர முடிந்தது.
தலைவரால் அப்படிச் சாற்ற முடிந்தது.
பிட்டை வாயில் இட்டுத் திணிக்கும்
தாயை நோக்கி அத் தடுக்குக் குழந்தை
''தாயே எனக்கிது சாகும் நேரம்'' என்று
வாயால் சொல்லும் வல்லமை இல்லை.
அறிவெனும் வெளிச்சம் அங்கே யில்லை.
மடமை மட்டும் மகிழ்ந்து கிடந்தது.

The mother called Sangili, the cook and said,
"Bring here that pan cake and pudding;
Perhaps the child is crying out of hunger!"
The cook Sangili brought the plate
And placed before her the breakfast!

✿ ✿ ✿

In the middle of the hall, a paper was spread
And pan cake and pudding were kept on it.
The master ate them along with some fleas!
But before pushing another piece of cake
Into his mouth, he began to vomit!
So desisted from taking the rest of the breakfast
And signalled that he didn't want it!

The elder boy meddled with the pudding!
Since he couldn't swallow even a bit of it
He blabbered something which none could understand!
What he really meant was this:
"My swollen gums block the way of food!
How can I take this breakfast?"

The boy was able to express his feelings!
The master could exhibit his reluctance!
But when the pudding was forcefully thrust
Into the mouth of the resisting child
It was not able to express,
"O mummy! I'm on the verge of death!"
The light of wisdom didn't exist there!
Foolishness was gleefully ruling supreme!

8

**பிள்ளை நிலைக்குக் காரணம் தோன்றிவிட்டது தலைவிக்கு!**

*தந்தியும் ஆணியும் தளர்ந்த யாழ்போல்*
*கூடத்து நடுவில் வாடிய சருகுபோல்*
*பெரியவன் பாயில் சுருண்டு கிடந்தான்.*
*என்பு முறிந்த வன்புலி யுடம்பைக்*
*கன்மேல் கிடத்திய காட்சி போல*
*ஓய்வுடன் தலைவர் ஒருபக் கத்தில்*
*சாய்வுநாற் காலியில் சாய்ந்து கிடந்தார்.*

✿ ✿ ✿

*வயிற்றின் உப்பலால் வாயிலாக் குழந்தை*
*உயிரை இழக்க ஒப்பாது கிடந்தது!*

✿ ✿ ✿

*நடை வீட்டினிலே கடையின் கணக்கன்*
*நெடுந் தூக்கத்தில் படிந்து கிடந்தான்.*
*வேலைசெய் வோர்கள் மூலையில் குந்தி*
*மாலை நேரத்தின் வரவுபார்த் திருந்தனர்.*

✿ ✿ ✿

*இல்லத் தலைவி எண்ண லானாள்:*
*''குழந்தை யுடம்பில் கோளா றென்ன?*
*வளர்க்கும் முறையில் மாற்ற மில்லையே!*
*களிம்புறு பித்தளை கைப்படக் கைப்பட*
*விளங்குறும். அதுபோல் வேளை தோறும்*
*கனிநிகர் உடம்பில் கண்ணை வைத்துப்*
*பனிபிணி யின்றிப் பார்க்கின் றேனே!''*
*எனப்பல வாறு நினைக்கும் போது*
*நெட்டை யன்தலை குட்டை இறைப்பினில்*
*பட்டதைப் போல் அப் பாவையின் நெஞ்சில்*
*பட்டதோர் எண்ணம்! பார்வை திருப்பினாள்.*

8

## THE INVENTION OF THE MISTRESS

Like the lute whose strings and screws are loose
And like a dry leaf, the boy lay like a curl
On the mat, in the middle of the hall!
Like a panther with fractured limbs
The master was leisurely resting
On an arm chair in a corner!

✿ ✿ ✿

With bulging belly the dumb child
Lay there, relentlessly fighting against death!

✿ ✿ ✿

In the verandah, the accountant of the shop
Lay like a log as he was fast asleep!
Servants were seated in different corners
Eagerly awaiting the arrival of the evening!

✿ ✿ ✿

The mistress of the house began to ponder:
"What is the ailment of the child?
Carefully we are rearing it!
Brass vessels get more and more polished
As often as we make use of them!
Just like that I'm carefully watching the child
And shielding it from the ravages of weather
And illness!" When she was thus pondering
Over so many things, she discovered one thing!
It was just a leap in the dark!

''மந்திரக் காரன் வரட்டும்'' என்றாள்.
அந்தச் சங்கிலி ''அவர் ஏன்'' என்றாள்.
''இந்த வீட்டில் இருளன் புகுந்ததால்
நொந்தது குழந்தை நோயால்'' என்றாள்.
வாலன் என்னும் மந்திரக் காரனை
அழைக்கின் றேன்என் றறைந்தாள் சங்கிலி!
''சரிபோ!'' என்று தலைவி சொன்னாள்!
நாழிகை போக்காது நடந்தாள் சங்கிலி!
''ஏழரை ஒன்ப திராகு காலம்
இப்போது வேண்டாம்'' - என்றான் தலைவன்!
வீட்டின் அரசியும் வேண்டாம் என்றாள்.
நடந்த சங்கிலி நன்றெனத் திரும்பினாள்.
வேலைக் காரியும் வீட்டின் தலைவியும்
நாலைந்து கடவுளின் நற்பெயர் கூறிக்
காப்பீர் என்று காப்புங் கட்டி
வேப்பிலை ஒடிக்கும் வேலையில் நுழைந்தார்.

௯

## வரவேண்டிய பணம் நல்லவேளையில்தான் வந்தது

வீட்டு முன்கட்டில் வீட்டுக் காரனும்
''காட்டுமுத்'' தெனும் கணக்கனும், ஏதோ
ஓசை காட்டிப் பேசி யிருந்தனர்.
அந்த நேரம் அந்த இடத்தில்
பாக்கியும் வட்டியும் பட்டுச் செட்டி
தூக்கி வந்து தொகையாய் எண்ணினான்.
வீட்டுக் காரனும் வீட்டுக் கணக்கனும்
சீட்டை எடுத்துச் செல்கு வைத்தார்.
பட்டுச் செட்டி பகரு கின்றான்:
''இராகு காலம் எட்டிப் போனபின்
தரவேண் டியதைத் தந்தேன். ஆயினும்
தந்த பணத்தைச் சரியாய் எண்ணிச்
சொந்தப் பெட்டியில் சுருக்காய் வைப்பீர்''
என்று கூறி எழுந்து போனான்!

"Let the sorcerer come", she said.
"What for?" the cook Sangili asked.
"Since an evil spirit has entered our house.
The child has become ill", she replied.
Sangili assured to fetch Velan
A sorcerer of renown!
"Go ahead!" the mistress gave her consent.
She began to move wasting not a minute!
"Between seven thirty and nine, better to avoid!
It is under Rahu's spell", the master reminded!
The mistress also agreed.
Then she and the servant maid
Invoked the blessings of four or five gods
Making a vow to make them due offerings
And began to collect margosa leaves!

௯

## AT THE AUSPICIOUS TIME

At the entrance of the house, its master
And his accountant Kattumuthan
Were loudly discussing some thing!
Then Pattu Chetty came to that spot
With money due to be paid to the master
And he was counting the amount he had brought.
The master and the accountant
Made the necessary entry in the account book.
Pattu Chetty then made the following remark:
"I have now repaid the amount
After the spell of Rahu is over! Yet,
Carefully count it again and
Keep it safely in the chest"
Saying so, he went off.

## 10

### எலிக்கூத்து, பூனை மகிழ்ச்சி

இனிதாய்ப், பகல் மணி பனிரண்டானது!
பழங்கல அறைக்குள் பதுங்கி யிருந்த
கிழஎலி கள்தம் கிளைஞ ரோடு
கூடத் திற்சிறு குண்டான் மேலும்,
மாடிப் படியில் மட்குடந் தனிலும்,
ஆடல் பாடல் அரங்கு செய்தன.
தயிரின் மொந்தையில் தலை புகாததால்
நறுக்கென்று சாய்த்து நக்கிற்றுப் பூனை!
வடித்த சோற்றை வட்டியில் கண்டு
தடித்தடிக் காக்கைகள் சலிக்கத் தின்றன!

✿ ✿ ✿

வீட்டினுள் காற்று வீசுந்தோறும்
மோட்டு வளையில் மொய்த்த ஒட்டடை
பூமழையாகப் பொழியும் தரையில்
ஊமைக் குப்பைகள் உம்மென்று மேலெழும்.

## 11

### தலைவர் சாப்பிட முடியவில்லை

சங்கிலி தலைவரைச் சாப்பிட அழைத்தாள்.
அங்கே பசியால் அழியும் தலைவரோ
மெதுவாய் எழுந்தார்; அதே நேரத்தில்
எப்போ தும்போல் இரண்டு பல்லிகள்
பளபள வென்று பாடவே, தலைவர்
மீண்டும்நாற் காலியில் விசையாய்ச் சாய்ந்தார்.

10

## DANCING RATS

It was about twelve in the noon.
Rats which were hitherto hiding themselves
Emerged with their kith and kin
And enacted a lively dance
Over the utensils kept in the hall
And on the mud pots placed on the staircase!
Since the mouth of the curd pot was too small
Cat caused it turn down and licked the curd!
Crows in large numbers enjoyed
Eating the boiled rice kept in a plate!

✿ ✿ ✿

Whenever the gentle breeze entered the house
The cob-webs hanging on the roof
Came down like a shower of flowers!
The dust of the floor pervaded everywhere!

11

## AN URGENT TASK AHEAD

Sangili summoned her master for lunch.
The master who was under the spell of hunger
Slowly got up! In the meantime
Two lizards simultaneously made geckos
As usual! Suddenly the master
Resumed his seat on the armchair!

அந்த நேரம் அங்குநின் றிருந்த
கணக்கன் தலைவரைக், கனிவுடன் அழைத்தே
''இன்று நீங்கள் இலந்தை யூர்க்குச்
சென்று வஞ்சகன் சிற்றம் பலத்தைக்
கண்டு பணத்தைக் கையொடு வாங்கிக்
கொண்டு வருவதாய்க் கூறினீர்களே,
ஐதராப் பாக்கம் அவன் ஓடிவிட்டால்
பைதரா வழக்கும் பயன்ப டாதே
பத்துப் பைகள் பறிபோக லாமோ?''
என்று பலவும் எடுத்துச் சொன்னான்!
''நன்று நன்று சென்று நீஒரு
காரைப்பேசிக் கடிதில் கொண்டுவா.
அச்சாரப் பணம் ஐந்துரு பாய்கொடு.
கடன்பட் டவனைக் கையொடு பிடிக்க
அரச காவலர் அங்கே இருப்பரேல்
ஐந்து ரூபாய் அவரிடம் கொடுத்து
வேண்டிய ஒழுங்குடன் விரைவில் அழைத்துவா''
என்றார் தலைவர்! ஏகினான் கணக்கன்.

## 12

**தலைவரின் மைத்துனர் வருகிறார். வரவேண்டாம் என்று வரவேற்கிறார்**

ளொள் ளொள் என்று வெள்ளை நாய், வீட்டின்
வாயிலில், யாரையோ வரவேற் கின்றதை
வீட்டுக் காரர் கேட்டார் காதில்.
நீட்டினார் தலையை வீட்டின் வெளியில்;
மைத்துனர் ஊரினின்று வருவதாய் அறிந்தார்.
''வாரும் வாரும் வாரும்'' என்றார்.
மைத்துனர் ''வந்தேன் வந்தேன்'' என்று

The accountant who stood by his side
Politely reminded his master:-
"Today you are scheduled to go
To the village Elandayur
For meeting the dupe Chitrambalam
And collect the dues from him!
If he flees to Hyderabad
Court proceedings would be of no use
And we would incur huge loss!"
Everything he explained thus!
"Yes, yes! Go and fetch
A cab here at once!
Pay some advance for hire!
See whether any constable
Is available to assist us!
Give him also some amount
And bring him here soon!"
The master said. The accountant departed.

12

## A CURIOUS RECEPTION

The white dog barked aloud
And received somebody near the gate.
On hearing the barking sound
The master peeped his head and noticed
The arrival of his brother-in-law.
As he warmly welcomed him
The guest politely responded.

*வாயிற் படிமேல் வைத்தார் காலை;*
*இடறிற்றுக் கால்!! ''இரும் இரும் மச்சான்*
*வராதீர் மச்சான் வராதீர்'' என்றார்.*
*''இல்லை இல்லை'' என்றார் மைத்துனர்.*

✿ ✿ ✿

*தூய குறிதான் தோன்றும் வரைக்கும்*
*வாயிலில் காலை வைக்கலா காதென*
*மைத்துனர், எதிரில் மாட்டுக் கொட்டிலில்*
*மொய்க்கும் கொசுக்களால் மூடுண் டிருந்தார்.*
*காரும் சாவடிக் காவல ரோடு*
*நேரில் வீட்டெதிர் நின்றது வந்து;*
*விரைவாய் உண்டார்; விரைவாய் ஏறினார்;*
*விரைவாய்க் காரும் தெருவை அகன்றது.*
*கணக்கனும் அந்தக் காரில் சென்றான்.*

## 13

## தலைவியும், அவளின் அண்ணனும் பேசுகிறார்கள்

*மைத்துனர் வீடு வந்து நுழைந்தார்.*
*ஒத்த அன்பின் உடன்பிறந் தாளைத்*
*''தங்கையே! என்ன அங்கே செய்கிறாய்?*
*உடம்புக் கென்ன? ஒன்று மில்லையே?*
*குழந்தைக் கென்ன? குறைபா டில்லையே?*
*பெரியவன் நலத்தில் பிழைபா டில்லையே?*
*குடித்தனம் எவ்வாறு? தடித்தனம் இல்லையே?''*
*என்று கேட்டார். எதிரில் நின்றவள்*
*''இருக்கின் றேன்நான்'' என்று கூறினாள்.*
*சாகாதிருப்பது தனக்கே வியப்போ?*



✿ ✿ ✿

When he set his foot on the door step
He faltered a bit! "Please wait!
Don't come now, dear sir!" he said.
He also accepted his words.

✿ ✿ ✿

Till the auspicious time arrived
His brother-in-law didn't want to step in!
Hence calmly waited at the cattle shed
Surrounded by swarming mosquitoes!
A car arrived there carrying a constable
And halted near the entrance of the house.
The master quickly ate! Hastily got into it!
Suddenly the car sped from there.
Accountant also accompanied his master!

13

## PRESENTS FOR THE CHILD

The brother-in-law entered the house.
Addressing his beloved sister, he asked,
"O my sister! What're you doing there?
Hope you are all right! No illness!
Hope the babe also is doing well!
What about the health of the elder boy?
How about your domestic life?
Hope your husband is not rude!"
"I'm still alive!" the maid replied!
Being alive is a wonder to her, it seems!



✿ ✿ ✿

*அங்குப் பாயினில் அயர்ந்து கிடந்த*
*வாயிலாக் குழந்தையை மைத்துனர் கண்டார்.*
*இயம்ப முடியா இரக்கம் அடைந்தார்!*
*அவ்விரக் கத்தின் அறிகுறி யாகத்*
*தூங்கும் பிள்ளையைத் துயருற எழுப்பி*
*வாங்கிவந்த மாம்பழம் அனைத்தையும்*
*ஆங்கே குழந்தை அண்டையில் பரப்பினார்.*
*பூந்தி கட்டிய பொட்டணம் அவிழ்த்துக்*
*கொஞ்சம் அள்ளிக் குழந்தை முகத்தெதிர்*
*வஞ்சம் இன்றி வைத்துக், "குழந்தையே*
*பாங்கொடு தின்னப் பழமும் பூந்தியும்*
*வாங்கி வந்தேன் மருந்துபோல்" என்றார்;*
*ஓட்டை நீக்கி உள்ளீடு தன்னைக்*
*காட்டி விளாம்பழம் கருத்தாய்த் தின்என்று*
*அதையும் குழந்தையின் அண்டையில் வைத்தார்?*
*குழந்தை கிடந்த கூட மெல்லாம்*
*உழுந்து கிடந்த ஒருகளம் போலவும்*
*வேம்பின் பழம்பூ விரிதரை போலவும்*
*ஈயின் காடும் எறும்பின் காடும்*
*ஆயிற்று! மைத்துனர் அப்புறம் சென்றார்.*

## 14

### பெரிய பையனுக்கு விளையாட்டுத் துப்பாக்கி!

*அங்கே, பெரியவன் அடுக்கிய இரண்டு*
*மூட்டை போல் உதடுகள் முன்னே தோன்ற*
*மல்லாந்து மார்பை மறுபுறம் திருப்பாது*
*சொல்லும் இன்றித் துடிக்கும் நெஞ்சோடு*
*மாம்பழம் விளாம்பழம் வந்த வழியில்*
*காதைச் செலுத்திக் கண்ணைச் சாய்த்து*
*மாமனை எதிர்பார்த் தூமைபோல் அழுதான்.*

He saw the mute babe
Which lay there on the spread mat.
He felt pity on the child
And as a mark of his sympathy
He woke up the sleeping child
And spread around it
All the mangoes he had brought!
Opening the pack of sweet-meats
He placed a portion of it
In front of the child!
"All these things I've purchased
For the sake of the child!" he said.
Then broke open the outer shell
Of a wood-apple and offered it
To the child to eat!
The hall in which the child was placed
Looked like a threshing floor
And like a spread of neem flowers!
It was a jungle of fleas and ants!
The brother-in-law moved from there.

14

## A TOY GUN TO THE ELDER BOY

The elder boy lay on the bed
With lips looking like loaded bags!
He was facing upwards!
But with mounting pulse beats
He tried to listen to their words
And glanced at the scattered fruits!
Expecting his uncle he cried like a dumb child!

மாமனோ சென்னையில் வாங்கி வந்த
கைத்துப் பாக்கியைக் கையில் கொடுத்தான்.
பெரியவன் உதடுகள் சிரித்தாக வேண்டும்!
வெள்ளைப் பற்கள் வெளித் தோன்றாமல்
பிணம்சிரிப் பதுபோல் பெரிதும் சிரித்தான்.
தங்க மாமனார் தாமும் சிரித்தார்.
உரியவள் இதனை உணர்ந்து சிரித்தாள்.
கைத்துப் பாக்கி மெய்த்துப் பாக்கிபோல்
வித்தென்று தக்கை விலகி வெடிப்பதை
மாமனார் காட்டினார். மங்கையும் பையனும்
வியப்படைந் தார்கள். வீட்டுக் காரியோ
''அண்ணா அதனை அந்தப் பெட்டிமேல்
வைத்து விடுங்கள் வைத்து விடுங்கள்.
அவனிடம் கொடுக்க லாகா'' தென்றாள்.
அவ்வா றதனை அங்கே வைத்தான்.

## 15

**பையனின் சாதகம்.**
**கைப்பிள்ளைக்குச் சாவே கிடையாது.**

''என்னருந் தங்கையே இந்தப் பெரியவன்
நன்றாகப் படிக் கின்றானா? சொல்!''
என்றான். தங்கை இயம்பு கின்றாள்:
''சாதகம் பார்த்தோம் சரியாய் அவனுக்குப்
பத்தொன்ப தாண்டு படிப்பு வராதாம்.
இருபதில் உலகையே என்னதென் பானாம்!''
என்றுதன் அண்ண னிடத்திற் கூறினாள்.
''கையோ டிந்தக் கைக்கு ழந்தையின்
குறிப்பையும் பார்த்தால் குற்ற மென்ன?''
என்று கேட்டான் பின்னும் அண்ணன்.

The uncle handed over him a toy gun
Which he had purchased in Madras.
The boy wanted to smile and greet!
But without revealing his teeth,
He made a wry smile like a corpse!
The uncle also responded.
Mother also understood and smiled.
The uncle made a demonstration
Of the operation of the toy gun
Which emitted a cork-made shell!
Mother and son were wonder-struck!
"O brother! Keep the gun over the box!
Do it please! It is not prudent
To give him the gun!" she said.
He placed it there as advised.

15

## PREDICTIONS OF THE ASTROLOGER

"O sister! Does the elder boy fare
In his studies well? Please tell!" he asked.
The beloved sister politely replied,
"We consulted an astrologer! He says that
Upto nineteen, the boy won't be bright!
At his twenty he would become all powerful!"
When the woman narrated this
Her brother again asked her,
"Why not you consult the horoscope
Of this baby also? Won't it be wise?"

''காட்டினேன் குழந்தையைக் கல்லில் தூக்கிப்
போட்ட போதிலும் போகாதாம் உயிர்!
தொண்ணூறு வயதென்று சோசியன் சொன்னான்!
மந்தத் தாலே வந்த நலி இது!
இந்த வீட்டில் இருளன் புகுந்ததால்
நலி இவ்வாறு வலிவு பட்டது.
வளரும் பிள்ளைக்கு வயிற்றுக் கோளாறு
வருவதும் போவதும் வழக்கந் தானே!
நாளைக்கே இது நன்றாய்ப் போய்விடும் ஃ
ஏழு மலையான் இரக்கம் வைப்பான்
காப்பாய் என்று காப்பும் கட்டினேன்.''
என்று தங்கை இயம்பினாள். அவனோ
''சமையல் ஆனதா தங்கையே?'' என்றான்.

## 16

''ஆமாம் இந்த அலைச்சலில் உங்களை
சாப்பிடும் படியும் சாற்ற வில்லை''
என்றாள். ''வெந்நீர் இருக்குமா?'' என்றான்.
''ஆமாம் ஆமாம் அடுப்பில் வெந்நீர்
கொதிக்க வைப்பேன் குளிப்பீர்'' என்றாள்.
வெற்றிலை கொஞ்சம் வேண்டும் என்றான்.
ஆமாம் ஆமாம் அதையும் மறந்தேன்
என்று கூறி ஈந்தாள் வெற்றிலை.
வெற்றிலை போட்டான் வெறித்துப் பார்த்தான்.
சாப்பிடச் சொல்லிக் கூப்பிட வில்லை.
பசியால் அண்ணன் பதைபதைக் கின்றான் ஃ
துடிப்போடு தங்கைபால் சொல்ல லானான் ஃ
''விடிய நாலுக்கு வீட்டை விட்டுக்
கிளம்பி னேனா? கிளிய னூரில்
சிற்றுணவுக்குச் சுற்றிப் பார்த்தேன்

"Of course, I did! The child won't die
Even if it is dashed against a rock!
Ninety years of life, the astrologer assures!
Since an evil spirit has entered the house
The illness has assumed such a proportion!
Stomach disorder for a growing child
Is after all a routine affair!
Tomorrow he would be all right!
God of Tirupati won't forsake him!
I have also prayed for that!"
Thus his sister explained.
"Is the lunch ready?" the brother asked.

16

## BROTHER IN BURNING HUNGER

"Yes, yes! In the pressure of work
I've forgotten to offer you lunch!" –
She said. "Is hot water available?"
He asked. "Wait a bit! I will prepare
And you can have a nice bath", she said.
"I need some betels", he said.
"Yes, yes! I've forgotten that also!" –
Saying so she offered some betels!
Munching them he cast a vague look.
She didn't invite him for lunch,
Though her brother was throbbing in hunger!
"See, I set out from the house by four
In the morning! In Kilianur
I could not get breakfast!

அகப்படவில்லை. அதற்குள் வண்டியும்
புறப்பட்டதனால் பொசுக்கும் பசியுடன்
ஏறினேன், இங்கே இழிந்தேன்'' என்றான்.
இந்தக் கதையை இயம்பித் தனது
பொறுக்கொணாப் பசியைப் புகன்றான். அவளோ
''எங்கள் அண்ணன் ஏறி வந்த
வண்டியே வண்டி வண்டியே வண்டி''
என்று வண்டியின் இயல்பைப் பற்றி
எண்ணி மகிழ்ந்தாள்! மண்ணாங் கட்டி!

## 17

### மாலை ஏழுமணிக்குக் காப்பி முடிகிறது

அண்ணன் உடனே அருகி லிருந்த
உணவு விடுதியில் உண்டு வந்தான்.
குறட்டைத் தூக்கம், குழந்தையின் அழுகை,
பெரியவன் உதடுகள் புரிந்த இன்னல்
இவற்றுடன் மாலை ஏழுமணி ஆயிற்று.

✿ ✿ ✿

வேலைக் காரிகள் பாலைக் காய்ச்சி
நாலைந்து செம்பு நன்றாய்க் குடித்தபின்,
தலைவியை எழுப்பித் தந்தார். குடித்தாள்!
பெரியவன் குடிப்பது சரியல்ல என்றே
இருபணிப் பெண்டிரும் இருசெம்பு குடித்தார்.
அருமையான அண்ணனை எழுப்பி
ஒருசெம்பு காபி தரும்படி, தலைவி
இயம்பினாள். சங்கிலி எழுப்பினாள். எழுப்பி
''காப்பி கீப்பி சாப்பிடுகின்றீரா?
ஏற்பாடு செய்யவா?'' என்று கேட்டாள்.
வேலைக்காரியின் விருப்பப்படி அவன்
வேண்டாம் என்று விளம்பி விட்டான்!

Meanwhile the bus began to start.
Hence with burning hunger
I got into the bus and arrived here."
Thus describing his journey in detail
He politely indicated his hunger.
But repeatedly she talked about
And wondered the charm of the bus
In which he had travelled!
Nonsense! Good-for-nothing!

[Betels are offered after lunch or dinner. Here the reference is made rather satirically]

17

## HOSPITALITY

The brother went to a hotel nearby,
Finished his lunch and came back.
Snoring sleep, crying babe
The elder boy's swollen lips –
Then it was seven in the evening.

✿ ✿ ✿

The servant maids boiled the milk
And after consuming some litres of it
Offered to their mistress. She drank.
Saying that the elder boy shouldn't take it
Both of them drank some more!
The mistress asked them to offer
A cup of milk to her brother.
Sangili woke him up and asked
Whether he needed tea or coffee
And whether she should arrange for it.
As per the 'wish' of the maid servant
He said, "No," to her question.

## 18

### மஞ்சள்தான் திருமணத்தாள் தானே, வேறென்ன?

*அண்ணனும் தங்கையும் அருகில் நெருங்கியே
பிறந்தஊர்க் கதைகள் பேசலா னார்கள்.
''நமது வீட்டின் நாலாவது வீட்டுக்
கமலத் துக்குக் கண்ணாலம் என்று
காயிதம் வந்தது கண்டீரா?'' என்றுதன்
அண்ணனைக் கேட்டாள். அண்ணன் சிரித்துக்
''கமலம் இறந்து கணக்கிலா நாட்கள்
ஆயின'' என்றான். அதுகேட்டு மங்கை
''இல்லை அண்ணா இதோ பாரு''மென்று
மஞ்சள் உறைக்குள் வந்த அஞ்சலைக்
கொண்டு வந்து கொடுத்தாள். அதை அவன்
மேலுறை கிழித்து நாலுசொல் படித்தான்.
அதற்குள் காரும் பொதுக்கென்று வந்தது.
வீட்டுத் தலைவர் வீட்டில் நுழைந்தார்.
சாய்வுநாற் காலியில் சலிப்புடன் சாய்ந்தார்.
''ஐதராப் பாக்கம் அவன்போய் விட்டான்!
பணமும் போனது! பற்றாக் குறைக்கோ
இன்று ரூபாய் இருபத் தைந்தும்,
பட்டினி யோடு பறந்து திரிந்த
தொல்லையும் வீணாய்த் தொலைந்தன'' என்றான்.
அந்த நேரம் அண்ணன் அங்கே
திருமண அழைப்பை விரைவாய்ப் படித்தான்.
ஏட்டினில் இருந்த தென்ன வென்றால் :
''அன்புடை யவரே அவ் வாசாமி
ஐந்து நாளில் ஐதராப் பாக்கம்
போவதாய்த் திட்டம் போட்டிருக் கின்றான்!
கடிதம் இதனைக் கண்ட வுடனே
வந்தால் தொகையை வட்டியும் முதலுமாய்
வாங்கி விடலாம்; வந்து சேரவும்!
அங்கவன் போனபின் இங்குநீர் வருவது
வீணே! இங்ஙனம் வீரா சாமி.''*

18

## A LETTER COATED WITH TURMERIC POWDER

The brother and sister sat side by side
And recalled the tales of their native place.
"It seems Kamalam who dwells
In our street, some houses away from ours
Gets married! Have you got the invitation?"
So, she asked her brother who simply smiled
And broke the news that Kamalam had died
Long ago! The maid didn't accept his words
And produced a postal cover on which
Turmeric powder had been smeared!
He opened the cover and began to read.
Meanwhile the car appeared at the entrance –
The master of the house suddenly entered
And sat on the chair in frustrated mood!
"That fellow has fled to Hyderabad!
My entire money is lost!
Today's taxi fare, my roaming round
With hungry stomach – all sheer waste!"
The master wailed and at that juncture
Her brother started reading that letter.
The contents of it were:
"Respected Sir! That fellow has planned
To flee to Hyderabad
Within four or five days!
If you go over here at once
We can collect the principal and interest.
Hence come here without fail!
Or else, everything would be waste!
Your loving Veeraswamy."

## 19

**தலைவர் எரிச்சல். இருவர் சண்டை.**

*''எப்போது வந்த திந்தக் கடிதம்''*
*என்று தலைவர் எரிச்சலாய்க் கேட்டார்.*
*''ஏழெட்டு நாள்முன் இங்கு வந்தது.*
*திருமணத் துக்குச் செல்லமாட்டீர் என்று*
*அடுப்பங் கரையில் அதனை வைத்தேன்.*
*இதனா லென்ன?'' என்றாள் தலைவி.*
*''இதுவா திருமணம்?'' என்றார் தலைவர்.*
*''மஞ்சள் கடிதம் மணமா அல்லவா?''*
*என்று கூறினாள் எல்லாம் தெரிந்தவள்.*
*பதரே என்று பல்லவி தொடங்கினார்.*
*அடக்கென் றெடுத்தாள் அவள் அநுபல்லவி!*
*''எங்கிருந் தாயடி என்குடிக் கிப்படி*
*மங்கிப் போக வைத்தாய் காலடி?*
*பொங்க லாண்டி யாகப் போம்படி*
*புரிவ தெல்லாம் மிகவும் அழும்படி!''*
*எனவே இப்படி முடித்தார் முதலடி!*
*தானும் தொடங்கினாள் தாளத் தின்படி!*
*''ஊருக் கழித்தாய் உருப்பட வா நீ?*
*நாட்டுக் கழித்தாய் நலம்பட வா நீ?*
*இனியும் ஊரில் எடுபட வா நீ?''*
*என்று கூறி எழுந்தாள் அம்மை.*
*இரண்டாம் அடியை இப்படி முடிக்குமுன்*
*வந்த அண்ணன் வந்த வழியே*
*சந்தடி யின்றிச் சடுதியிற் சென்றான்.*

19

## QUARREL IN THE FAMILY

"When did you receive this letter?"
The master asked her out of ire!
"Seven or eight days ago I received.
You are not in the habit of attending weddings!
So I kept it in the kitchen!
Is there any fault?" the mistress asked.
"Is this a wedding invitation?" the master questioned.
"What is the indication of turmeric powder,
Except a wedding?" asked she with clear vision!
"You, chaff!" he fired his first salvo!
"Shut up your mouth!" was her counter assault.
"Where did you goose come from
To cause harm to our family's name!
Your acts would make me pauper
And weep and wail for ever!"
She too responded in the same tenor:-
"You squanderer! Can you prosper?
A spendthrift! Would you ever flourish?
Would you still be regarded as ever?"
Saying so, she wept and wailed.
During such a heated exchange of words
Her brother who had made a visit
Silently slipped out!

## 20

**தலைவர் கோபித்துக்கொண்டு புறப்படுகிறார்.**

*வீட்டுக் காரர் மேலும் தொடங்கினார் ஃ*
*இந்தாடி என்றே எடுத்தடி வைத்துப்*
*பந்தா டிடுவேன் பார்எனக் குதித்துப்*
*பல்லைக் கடித்தே பரக்க விழித்தே*
*கொல்லைக் கோடிக் கோலைத் தேடி*
*விட்டே னாஎன மீசை முறுக்கிச்*
*சட்டென இதுதான் தக்க தென்று*
*துண்டை எடுத்துத் தோளில் போட்டுச்*
*சுண்டெலி வால்போல் தொங்கும் தலைமயிர்*
*கோதி நுணாக்காய்க் குடுமி முடித்துக்*
*காதில் தொங்கும் கடுக்கனைத் துடைத்துச்*
*''சாப்பிட மாட்டேன் சற்றும் இங்கிரேன்.*
*கூப்பிட நினைத்தால் கொன்று போடுவேன்*
*இங்கு நான் இரேன் சங்கிலி, தெரிந்ததா?*
*எங்கே பையன்? இரடா இங்கே''*
*என்று கூறி - ''எங்கே? செருப்பும்*
*ஒன்று தானா?'' என்றதை அணிந்து*
*சென்று பின்பு திரும்பி வந்து*
*''கன்றையும் மாட்டையும் நன்று கருது நீ.*
*உன்னிடம் குழந்தையை ஒப்புவித்தேன்.*
*சங்கிலி இன்னும்நான் சாற்றுவ தைக்கேள் ஃ*
*இப்போ தேநான் இவ்விடம் விட்டுச்*
*செட்டித் தெருவில் தென்னை மரத்தோ*
*டொட்டி இருக்கும் ஒருவீட் டருகில்*
*குட்டிச் சுவரின் கோடியி லிருக்கும்*

20

## THE MASTER'S IRATE EXIT

The master again continued his assault!
Contemptuously addressing her, he threatened
To kick her like a football!
He ground his teeth, stared at her
Hastily went to the backyard
In search of a stick to beat her!
Screwed his moustache with a grin
And as if having come to a decision,
Placed a towel on his shoulder
Made a knot of his tuft that looked
Like the tail of a mouse,
Rubbed the dust of his ear ornament
And declared that he won't take food!
Again vowed that he won't remain there
And none should persuade him
To come back! He warned Sangili!
Questioned the whereabouts of the boy!
"Where are my sandals?
Only one is available! All right!"
Wearing that one he set out
And again came back and cautioned
To take care of the cow and the calf!
Also to take care of the tender child!
"Sangili! Pay heed to my words!
Now itself I'm going out!
You know in the Chetty Street
There is a coconut tree

இரிசி வீட்டின் எதிர்த்த வீட்டில்
இருப்பேன்; நீயோ என்னை அங்கு
வந்து கிந்து வருவாய் கிருவாய்
என்று கூப்பிட எண்ண வேண்டாம்.
அந்த வீட்டெண் அறுபத் திரண்டுதான்.
தெருப் பக்கத்தில் இருக்கும் அறையில்
இருப்பேன் அழைத்தால் வரவே மாட்டேன்!''
என்று தலைவர் இரைச்சல் போட்டு
நடைவரைக் கும்போய், இடையில் திரும்பி
அழைப்பார் இல்லை; ஆதலால் மீண்டும்
திரும்பிப் பார்த்துத் தெருவொடு சென்றார்.

## 21

### சங்கிலி தேற்றல், தலைவியின் தூற்றல்

சங்கிலி வந்து தலைவியை நோக்கியே
''தங்க மான தங்கள் கணவருக்
கிப்படி யெல்லாம் எரிச்சலுண் டாக்குதல்
தப்பா அல்லவா சாற்றுவீர்'' என்றாள்.
''உரைத்தது போதும் உட்கார்'' என்று
தலைவி சொன்னாள் சங்கிலி அமர்ந்தாள்.

✿ ✿ ✿

By the side of which, there is
A long roofless wall!
Irusappan's house is situated
At the end of it!
I would be there in the house
Just opposite to that!
Sixty-two is the number of the house!
Don't think of coming over there
And invite me to come here!
I would remain in the room
That is just near the street!
However much you plead
I won't come back! It is sure!"
Thus the master shouted aloud and went
Upto the doorstep! Turned about and looked!
Nobody was there to pacify him.
So, he went along in the street!

21

## THE MISTRESS, UNBENDING!

Sangili addressed her mistress
And asked her to consider
Whether it was fair on her part
To ill-treat her husband like that!
"Enough of your advice! Sit down!"
As her mistress said so, she sat down!

✿ ✿ ✿

''மலைக் குரங்கா மனிதரா அவர்தாம்?
கோணங்கி ஆடிக் கொக்க ரித்தார்!
ஆணாய்ப் பிறந்தால் அமர்க்கை வேண்டும்!
இவர்போல் மனிதரை யான்பார்த்த தில்லை.
சுவரா கல்லா சொல்வதைப் பொறுக்க?
மூச்சு விட்டாலும் ஆச்சா என்கிறார்.
சீச்சி இவரொரு சின்னப் பிறவி!''
என்றிவ் வாறு பன்றிபோல் உறுமிச்
சென்று சோறுபோடு - என்றாள் தலைவி.

## 22

### மண்ணெண்ணெய்க் கையோடு சாப்பிடுகிறார்கள்...!

பையன் நோய் சிறிது படிந்திருந்ததால்
பைய நிமிர்ந்து பசிபசி என்றான்!
பைய னுக்கும் பரிமாறி னார்கள்.
தாயும் பிள்ளையும் சரேலென் றெழுந்தே
இட்டமண் ணெண்ணெய்ப் புட்டியை இடறி
எண்ணெய் சாய்ந்ததால் இச்இச் என்றே
இருவரும் கையால் எடுத்துரு வாக்கிக்
கடிது சமையல் கட்டினை அடைந்தார்.
சோற்றில் ஏதும் சுடுநாற்றம் இல்லை;
சாற்றி லேதும் தவறே இல்லை;
குழம்பில் ஏதுங் குற்றமில்லை;
அவைகள் சுவையுடன் அமைந்தன எனினும்
அந்த இருவரும் அலம்பாத கையொடு
வந்துட் கார்ந்தார் வழக்கப் படியே!
சோற்றில் ஏதோ சுவை குறைவுற்றது
சாற்றில் ஏதோ குறை தோன்றிற்றுக்

"Is he a man or a monkey of the hill?
He shouted! Enacted a devil dance!
Men should have some patience!
Never have I seen a person like him!
Am I a chattel to endure all this?
Too much hot-tempered he is!
Phee! Phee! A loathsome creature!"
Thus like a pig she grunted
And asked the cook to serve her food.

22

## FOOD – NOT GOOD!

Since the boy had somewhat recovered
He got up and asked for food,
Which was served to him also.
While hastily approaching the plate
They stumbled on a kerosene bottle!
Feeling sorry for what had happened
They handled kerosene with their palms
And hastily rushed to the kitchen!
The food had been properly cooked.
Both the sauce and the side-dish
Were perfectly all right!
All were delicious to eat!
The mother and son were taking their food
Without washing their hands, as usual!
So, they couldn't relish the food!
Something wrong they felt in the taste

குழம்பில் ஏதோ குறை தோன்றிற்றுச்
சுவையுடன் அமைந்தவை கவலை விளைத்தன.
வீட்டுக் காரி மிகவும் சினந்து
''இவற்றில் இனிமேல் சுவைதனை ஏற்ற
முடியுமா?'' என்று மொழிந்தாள்; மொழிந்ததும்,
''என்னா லாவ தினி யொன்று மில்லை''
என்று கூறினாள் எதிர்நின்ற சங்கிலி.
உண்டு முடிந்ததும் உள்ள கறியையும்
மீந்த சோற்றையும் வேலைக் காரிகள்
ஏந்தி வீட்டுக் கெடுத்துப் போயினர்.

23

**வீட்டுக்காரி, பையன் தூக்கம்.**

பெரிய பையன் பெட்டி யண்டையில்
கொரகொர வென்று குறட்டை ஏற
மெழுகுபோல அழுக்குப் படிந்த
தலையணை மீது தலையை வைத்து
விலகாது மூட்டை வெடுக்கென்று கடிப்பதும்
தோன்றா உணர்வோடு தூங்க லானான்.

ஈன்ற தாயோ ஈன்றகைப் பிள்ளையின்
அண்டையில் படுத்தாள். அலறிற்றுப் பசு;
வைக்கோல் போட மறந்தே னென்றே
ஓடி, வைக்கோலைத் தேடிப் போட்டு
நாடி வந்து நடுவிற் படுத்தாள்;
தெருவில் நாயும் குரைப்பது கேட்டுத்
தெருவின் கதவைச் சென்றுதாழ் இட்டாள்;
நவாப்புக் குதிரை நாடு முழுவதும்
சவாரி வந்து தரையில் புரளல்போல்
படுத்துப் புரண்டும் பிடித்தாள் தூக்கம்!

Of the sauce and the side-dish!
Though delicious, they were not satisfied!
The mistress of the house grew indignant
And asked the cook whether anything could be done
To make the food a delicious one!
"Nothing can I do, madam!"
Answered Sangili who stood there.
After they had finished their lunch
The remaining food and the side-dish
The servant maids packed up and took home!

23

## HER DEEP SLUMBER

The elder boy slept near the box
Emitting a jarring snoring sound!
Having placed his head on the pillow
The dust of which had accumulated like wax
He was fast asleep
Unmindful of the biting bugs!
The mother took bed by the side
Of her suckling tender babe!
As the cow bellowed, she got up
Placed some straw to it
And took bed again in the midst.
On hearing the barking sound of the dog
She bolted the outer gate.
Like a Nawab's horse that roams all round
And then leisurely rolls on the ground
She rolled and had a deep slumber!

## 24

**இரவு பத்துமணி, தலைவர் திரும்பி வருகிறார்.**

*எண்ணெய் இன்றி இருண்டன விளக்குகள்;*
*இருண்ட வீட்டில் இருளும் குழந்தையும்*
*அன்றி, மற்றை யனைவரும் துயின்றனர்!*
*குற்றுயி ராகக் குழந்தை கிடந்தது!*
*தூற்றும் பழியை ஏற்க அஞ்சி*
*நள்ளிரு ளானது பிள்ளை சாகாமல்*
*தன்மடி தனிலே தாங்கிக் கிடந்தது.*
*சரியாய் அப்போது - இரவு பத்துமணி;*

*தலைவர் திரும்பித் தம்வீடு நோக்கினார்*
*தலைவா சலில்நாய் தான் வர வேற்றது*
*வீடுமுடியும் விளக் கவிந்தும் இருட்*
*காடுபோல் இருப்பது கருதிக் கனைத்தார்.*
*கனைப்பது கேட்டு மனையாள் வந்து, தாழ்*
*திறப்பாள் அல்லவா? திறக்கவே யில்லை.*
*நாயை நோக்கி நவின்றார் தலைவர்,*
*''நீயேன் தெருவில் நிற்கிறாய்?'' என்று!*
*நாய் அதுகேட்டு ஞய்ஞய் என்றதாம்.*
*அதற்கும் வழியில்லை அழகிய வீட்டில்.*

*கதவைத் தட்டினார் கையின் விரலால்!*
*பதியத் தட்டியும் பார்த்தார் பிறகு!*
*அழுந்தத் தட்டினார் அங்கை யாலே!*
*அடித்தார் இடித்தார் படபட வென்றே!*
*எட்டி உதைத்தார் இருநூறு தடவை!*
*முதுகைத் திருப்பி முட்டியும் பார்த்தார்!*

## 24

## THE MASTER COMES BACK

Since there was no oil, the lamp was not lit!
In that dismal house, except the child
And darkness, everyone slept!
The babe was on the verge of death!
Scared of the possible curse on it
The darkness kept the child
Safely on its lap!
It was exactly ten in the night.
Coming back to the house, the master
Gazed at it! The dog welcomed him.
The door was closed! Lamps had been put out!
It was like a jungle! Hence he roared
In full-bloated throat, with a fond hope
That his wife would come and open the door!
But, no response! The door was not opened.
He addressed his pet dog and asked
Why that also stood in the street!
Some peculiar sound from its mouth!
That too didn't have a place in the house!

✿ ✿ ✿

He knocked at the door using his fingers
Then increased his force and tried,
By using his mighty hands!
Dashed against the door! Pounded it!
Kicked it a hundred times!
Turned his back and again dashed!

## 25

### அண்டை அயலார்க்கு இடையூறு!

*எதுவும் பயன்பட வில்லை ஆயினும்*
*அண்டை அயலில் அருகில் இருந்தவர்*
*தக்கத் தரிகிடத் தாளம் கேட்டுத்*
*தூக்கங் கலைந்ததால் சூழ்ந்தோடி வந்து*
*மூக்கில் எரிச்சலை முன்னே நிறுத்தி*
*''என்னங் காணும் இந்நேரத்தில்*
*தச்சுப் பட்டரை வைச்சது போலவும்*
*அச்சுப் பிப்பாய் அடிப்பது போலவும்*
*இப்படித் தட்டி இன்னல் விளைக்கிறீர்!*
*உள்ளே இருப்பவர் உயரோ டிருந்தால்*
*கொள்ளுக் கட்டிய குதிரை போல*
*வாய்திறக் காமலா வம்பு செய்வார்கள்?''*
*என்று கூறி இரைச்சலிட் டார்கள்.*
*கதவு மிகவும் கனத்த தென்றார்.*
*''எழுந்து திறப்பாள் என்பதை நீவீர்*
*எதிர்ப்பார்த் திடவே யில்லை போலும்!*
*கதவை உடைப்பதே கருத்துப் போலும்!''*
*என்று சிரித்தே ஏகினார் வந்தவர்.*

25

## DISTURBED NEIGHBOURS

All his attempts were of no use!
Those dwelling in the neighbouring houses
Heard this ceaseless and rhythmic sound and
Rushed there as their slumber was disturbed!
In an infuriated mood they asked,
"Why do you cause such a tormenting sound
As if a carpenter's work is on
And as if a treadle-press is functioning?
You are causing disturbance to all!
If persons inside are alive
Will they remain so dumb
Like a bridled horse?"
Thus all of them shouted at him!
"The door is so strong!" he asserted.
"Perhaps you don't expect your wife
To come and open the door!
Hope you've decided to break it open!"
Thus they mocked at him and went off.

## 26

**கதவு திறக்கப்பட்டது. தலைவர்க்குப் பசி, கூச்சலிட்டுப் பார்த்தார்**

*மேலும் கதவிடிப்பு வேலை தொடங்கிற்று.*
*பனிரண்டு மணிக்குத் தனிப்பெருந் தலைவியின்*
*சிறுவிரல் தன்னைத் தின்ற திருட்டெலி*
*பெருவிரல் தன்னைப் பிடுங்கும் போதுதான்*
*விழித்தாள். காதில் வீதியில் தொலைவில்*
*புழுவொன்று சருகுமேல் புரள்வது போன்ற*
*ஓசை தன்னை உற்றுக் கேட்டாள்.*
*ஆசை ஆம்படை யானா என்றே*
*மெதுவாய் எழுந்து மெதுவாய் நின்று*
*மெதுவாய்ப் பெயர்ந்து மெதுவாய் நடந்தே*
*கோட்டை நடுவின் வேட்டுப் போலத்*
*தலைவர் இடிக்கும் தடித்த கதவைத்*
*திறந்து விட்டு திரும்பி வந்து*
*நிறைமுக் காட்டோடு நீட்டிப் படுத்தாள்.*
*தலைவி விழிப்புடன் தலையசைப் பதையும்*
*முதல்மகன் கொண்ட முழுத்தூக் கத்தையும்*
*இருட்டில் விளக்கை ஏற்றிப் பார்த்த*
*தலைவர் ''ஏனடா தம்பி சாப்பாடு -*
*உண்டா இல்லையா உரையடா'' என்றார்.*
*''சாப்பாட்டுக் கடை சாத்தியாய் விட்டது*
*போப் பார்த்துத்தான் புறப்பட்டு வந்தேன்''*
*என்று கூறினார்! ஏதும் பதிலிலை.*
*''அத்தனை பேரும் அழிந்தா போனீர்?*
*ஒருவரும் இல்லா தொழிந்தா போனீர்?''*
*என்று கூறி இரைச்ச லிட்டார்.*

## 26

Again the door-pounding task continued.
By about twelve in the midnight
When a tiny mouse stealthily bit
A finger of the mistress of the house
She opened her eyes! In the street, at a distance
She heard the sound of a worm crawling
On dry leaves! Attentively listened
To that noise! Suspected that her husband
Might have arrived! So she got up!
With slow steps she went to the door
Which was facing the bomb shell
Of repeated onslaughts of her husband!
Opening the door, she began to sleep again
Covering her head and face with a cloth!
His wife was awake and moving her head;
The boy was in deep slumber;
All these things the master noticed
After lighting the lamp and asked,
"O my son! Is there any food to eat?
The hotel is closed, I noticed!
No way to get my food!"
"Have you all gone once for all?
Is not anybody alive here?"
Thus the master shouted aloud.

## 27

**சாப்பாடு இல்லை என்று தெரிந்தபின்,**
**சாப்பிடமாட்டேன் என்று சத்தியம் செய்கிறார் தலைவர்**

*அமைவாய் விளக்கை அங்கையில் தூக்கிச்*
*சமையல் அறைக்குத் தாமே சென்றார்;*
*ஏன மெல்லாம் இறக்கி இறக்கிப்*
*பூனை போலப் புரட்டித் தள்ளிப்*
*பொரியற் சட்டியைத் தட்டென்று போட்டே*
*எண்ணெய்ச் சட்டியை எடுத்துச் சாய்த்து*
*வெண்ணெய்த் தாழியை விரியத் தள்ளிச்*
*சோற்றுப் பானை துடைக்கப் பட்டதைக்*
*குழம்புச் சட்டி கழுவப் பட்டதைத்*
*தெரிந்து பசியோ, திகுதிகு என்றே*
*எரிவு கொள்ள, இழவே என்று*
*திறந்த வற்றைத் திறந்தே போட்டுப்*
*பெருச் சாளிக்குப் பிழைப்புண் டாக்கிக்*
*கூடத் தினிலே குந்திப் பார்த்தும்*
*பாடிப் பார்த்தும் படிந்து பார்த்தும்*
*எதுவும் நடவா தென்று தெரிந்தபின்*
*தலைவர் ஓர் உறுதி சாற்ற லானார்*
*''சாப்பிட மாட்டேன் சத்தியம்!'' என்று!*

## 27

## A VOW TO OBSERVE FAST

Holding a lamp gently on his palms
He himself entered the kitchen.
Surveyed the utensils there like a cat
Making some of them upside down.
Dashed the frying pan on the ground
And broke a pot into pieces.
Making oil pour down from an utensil
He broke the butter-containing pot!
The vessel that contained food was empty!
The sauce mug was cleanly washed!
But the burning hunger was eating
The master's vitals! He cursed all!
Kept open all the utensils he handled
Providing easy access to bandicootes!
Then, sat awhile in the hall –
Hummed a note! Even stooped a little!
Realizing that nothing worked out
The master took a solemn vow:
"I won't take food! It is a promise!"

## 28

**திருடன் வந்து, அலமாரி திறந்து,**
**தன் செயலை அமைதியோடு செய்கிறான்.**

*சரியாய் ஒருமணி இரவில் தலைவர்*
*தூக்கமும் பசியின் துடிப்பும் விழிப்பும்*
*இரங்கத் தக்கவாய் இருந்தன. தலைவியோ*
*கனவால் விழிப்பதும் கண்ணயர் வதுமாய்*
*இருந்தாள்! பையன் சொறிவான், தூங்குவான்!*
*இந்த நிலைமையில் இவர்கள் இருக்கையில்*
*திருடன் ஒருவன் தெருப் பக்கத்து*
*மாடிமேல் ஏறி ஆடா தசையாது*
*முற்றத்து வழியைப் பற்றி இறங்கினான்.*
*அவனோ கறுப்புடை அரையிற் கட்டிப்*
*பிறைபோற் கத்தியும் பிடித் திருந்தான்!*
*ஓசை யின்றி உள்ளறை புகுந்தான்!*
*படர்ந்தெரி விளக்கைப் பளிச்சென் றவித்தான்!*
*அலமாரி தனை அங்கையால் தடவினான்; இல்லை,*
*சாய்வுநாற் காலியில் சாய்ந்திருந் தவரின்*
*அண்டையில் இருந்த குண்டுப் பெட்டிமேல்*
*இருந்தது சாவி; எடுத்துச் சென்றே*
*அலமாரி தன்னைக் கிலுக்கென்று திறந்தான்!*
*வீட்டு நாய் அதனைக் கேட்டுக் குலைத்தது!*
*தலைவர் விழித்தார், தலைவி விழித்தாள்.*
*பெரியவன் விழித்தான். தெருவில் தொலைவில்*
*எதையோ கண்டு பதைத்தது நாய் என்று*
*மதமத வென்று மல்லாந் திருந்தனர்!*
*சிறிது நேரம் சென்ற பின்னர்*
*நிறையப் பணத்தாள், நிறையப் பணங்கள்*
*போட்டுக் கட்டிய பொத்தற் பைகளைக்*
*கையில் தூக்கினான் கரிய திருடன்;*
*பொத்தல் வழியே பொத்தென்று சிற்சில*

28

## A THIEF'S UNHINDERED OPERATION!

When it was one 'O' clock in the midnight
Pitiful was the position of the master
Who lay sleepless out of burning hunger.
Amidst her dreams, the mistress often woke up
At regular intervals! The boy often scratched
And then slept! At this juncture
A thief stealthily scaled on the stairs
Of the adjacent house and calmly
Gained entry into this!
Wearing a black robe around his waist
A crescent-shaped knife he had in his hand!
Then entered the room without any noise!
Put out the lamp which was burning there
Softly touched the *almirah* and felt
There was no key! Hence moved a bit
And searched under the pillow! No!
It lay on the large wooden box
Just near the seat of the master!
Taking the bunch of key from there
He moved towards the iron chest.
The dog began to loudly bark –
The master and the mistress woke up!
The elder boy also did. But they thought
That it was scared of something in the street!
Hence they didn't move a bit!
After the passage of some time
The dark thief lifted some torn bags
Containing bundles of currency notes

வெள்ளிக் காசுகள் வீழ்ந்த ஓசை
அனைவர் காதையும் அசைத்த தேனும்
''தலைவர் எதையோ தடவு கின்றார்''
என்று தலைவி எண்ணி யிருந்தாள்.
தலைவி பாக்குத் தடவினாள் என்று
தலைவர் நினைத்துச் ''சரி'' என் றிருந்தார்.
பெருச்சாளிஎன்று பெரியவன் நினைத்தான்.
திருடன் துணியொன்று தேடி, அதிலே
பெரும்பணப் பையைப் பெயர்த்து வைத்துக்
கட்டி இடது கையிற் பிடித்து
வலது கையில் வைத்தான் கத்தியை!

## 29

அவன்தன் காலை அயலில் பெயர்த்தான்;
கௌவிற்றுக் காலைக் கடுந்தேள் ஒன்று!
கடுந்தேள் அகற்றக் காலை உதறினான்.
தகரப் பெட்டியில் தன்கால் பட்டதால்
தடாரென றெழுந்த சந்தடிக் கிடையில்
கள்ளன் உட்புறக் கதவில் நுழைந்தான்!
தலைவர் சடுதியில் விளக்கை ஏற்றினார்.
கதவில் தமது தலையைச் சாய்த்துக்
கத்தியைக் கள்ளனைக் கண்ணால் பார்த்துப்
பின் வாங்கும் போது பெட்டியின்மேல்
கைத்துப் பாக்கி வைத்திருப்பதைக்
கண்டார்; அதனைக் கையில் எடுத்தார்.
விளையாட்டுக்கு வெடிப்ப தாயினும்
அந்தத் திருடனை அஞ்ச வைக்கலாம்
என்று தலைவர் எண்ணிக் கொண்டார்.

And a large number of silver coins!
Though some of them fell from the bags
Causing a lot of noise in the hall,
And all of them heard it, the mistress
Of the house was under the impression
That her husband was searching something!
The master likewise thought
His wife was searching for betel-nut!
The boy felt it was caused by a bandicoote!
The thief finally found out a piece of cloth
Put in it all the bags and bundled.
Held the bundle on his left arm
And a dagger on his right!

29

## TOOK THE GUN

When the thief was about to move
A deadly scorpion snatched his leg!
For wresting his leg from its clutch
He shook it and dashed against the tin box!
As a sound was accidentally caused,
The thief suddenly entered the room
And the master lit a lamp at once!
Since in the hole between the door and the frame
He could notice the hiding thief,
He saw him holding a knife
He made a retreat!
Then accidentally he noticed
The toy gun kept on the box!
"Though a toy, I can intimidate
The hiding thief with it!"
The master thought so!

## 30

### திருடன் நடுக்கம் – பையன் உளறல்!

*அந்த வேளையில் அருமைத் தலைவி*
*''கள்ளனா?'' என்று வெள்ளையாய்க் கேட்டாள்!*
*கள்ளன் அதுகேட்டுக் கதவிற் பதுங்கினான்;*
*கைத்துப் பாக்கியைக் கண்டு நடுங்கினான்;*
*''என்னைச் சுடாதீர்!'' என்று கூறிப்*
*பணத்தைக் கொடுத்துப் பயணப்படவும்*
*பண்ணினான் முடிவு! பையன் அப்போது*
*நிலைமை யாவும் நேரில் அறிந்தும்*
*பொய்த் துப்பாக்கியை மெய்த்துப் பாக்கி*
*என்று நினைக்கும் தன்னருந் தந்தையை*
*மடையன் என்றெண்ணி வாளாயிருந்தான்.*
*''எடுத்ததை வைத்துப் பிடியடா ஓட்டம்*
*சுடுவேன் பாரடா சுடுவேன்'' என்று*
*கைத்துப் பாக்கியைக் காட்டினார் தலைவர்.*
*அதுகேட்டுப் பெரியவன் ''அப்பா! அப்பா!*
*அத்துப் பாக்கி பொய்த் துப்பாக்கி;*
*தக்கை வெடிப்பது தானே'' என்றான்.*
*திருடனுக்கு - அச்சம் தீர்ந்து போயிற்று!*
*மெதுவாய் நடந்து வெளியிற் செல்கையில்*
*இதுவா தெருவுக்கு - ஏற்ற வழியென்று*
*திருடன் கேட்டுச் சென்று மறைந்தான்.*
*திருடன் கையோடு செல்வமும் மறைந்தது.*
*தலைவியும் பையனும் தலைவர் தாமும்*
*குலைநடுக் கத்தால் கூவா திருந்தனர்!*

30

## THE BOY'S FOOLISHNESS

At that moment, the mistress of the house
Plainly shouted, "You thief!"
On this, he retraced his steps!
Was scared of the master's gun!
"Don't shoot at me, please!" he cried.
Even decided to hand over the bundle
Of money and go! Then the boy
Understood the gravity of the situation!
He laughed at the foolishness of his father
In considering the toy gun as a real one;
But kept quiet at that moment!
"Place here everything you have stolen
And run! Otherwise I will shoot you with this gun!
Saying so, he pointed the gun at him.
The boy then interfered and shouted,
"O daddy! It is simply a toy gun!
It can emit harmless corks alone!"
The thief was relieved of the fear.
So he calmly walked out unperturbed
Asked whether that pathway would lead to the street,
Calmly went out and disappeared, along with
The entire wealth of the family!
Out of fear for their lives
They refrained from raising alarm!

## 31

**திருடன் போனது தெரிந்தபின் தலைவர்க்கு எரிச்சல் வந்தது. அந்த எரிச்சல் தலைவியைக் கொன்றது.**

*திருடன் அந்தத் தெருவை விட்டகன்றதை*
*ஐய மின்றி அறிந்த பின்னர்*
*தலைவர் அலறத் தலைப்பட்டார் : ''அடே*
*கொலைஞனே! எனக்குக் குழந்தையாய் வந்தாய்*
*கைத்துப் பாக்கியால் கள்ளன் நடுங்கினான்.*
*பொய்த்துப் பாக்கி பொய்த் துப்பாக்கி*
*என்றாய்; சென்றான் பொருளையும் தூக்கி''*
*என்று கூறி எதிரில் இருந்த*
*சந்தனக் கல்லைச் சரேலென எடுத்துப்*
*படுத்திருந்த பையனை நோக்கி*
*எறிந்தார்! பசியும், எரிபோல் சினமும்,*
*மடமையும் ஒன்றாய் மண்டிக் கிடந்த*
*தலைவன் எறிந்த சந்தனக் கல்லோ*
*குறிதவறிப் போய்க் கொண்ட பெண்டாட்டி*
*மார்பினில் வீழ்ந்தது! மங்கை ''ஆ'' என்று*
*கதறினாள்; அஃதவள் கடைசிக் கூச்சல்!*

31

## A MURDEROUS ASSAULT

After having clearly ascertained
That the thief had crossed the street
The master of the house began to shout,
"O brute! For your birth, I do repent!
When the thief was scared of the gun
You broke the news that it was a toy gun!
He has looted all our wealth!"
Saying so, he lifted a heavy stone
Which lay there near him
And threw it at his elder son!
He was goaded by hunger, burning anger
And foolishness and the stone so thrown
Accidentally landed on the chest of his wife!
That woman raised a huge alarm
And that was her last shout!

## 32

**பெரிய பையன் இல்லை. அயலார் நலம் விசாரிக்கிறார்கள்.**

குறி தவறாமல் எறிந்த முக்காலி
பெரியவன் தலைமேல் சரியாய் வீழ்ந்தது;
தலைவர் பின்னும் தாம்விட் டெறிந்த
விறகின் கட்டை வீணே; ஏனெனில்
முன்பே பெரியவன் முடிவை அடைந்தான்!
அறிவிலார் நெஞ்சுபோல் அங்குள விளக்கும்
எண்ணெய் சிறிதும் இல்லா தவிந்தது!
வீட்டின் தலைவர் விளக்கேற்று தற்கு
நெருப்புப் பெட்டியின் இருப்பிடம் அறியாது -
அன்பு மனைவியை அழைப்பதா இல்லையா
என்ற நினைப்பில் இருக்கையில், அண்டை
அயலார் தனித்தனி அங்கு வந்தார்கள்.
எதிர்த்த வீட்டான் என்ன வென்றான்
திருடனா என்றான் சீனன். விளக்கை
ஏற்றச் சொன்னான் எட்டி யப்பன்.
எதிர்த்த வீட்டின் எல்லிக் கிழவி,
"குழந்தை உடல்நலம் குன்றி இருந்ததே
இப்போ தெப்படி?" என்று கேட்டாள்.
விளக்கேற் றும்படி வீட்டுக் காரியை
விளித்தார் தலைவர், விடையே இல்லை!
என்மேல் வருத்தம் என்று கூறிப்
பின்னர் மகனைப் பேரிட் டழைத்தார்;
ஏதும் பதிலே இல்லை, அவனும்
வருத்தமாய் இருப்பதாய் நினைத்தார் தலைவர்!
அயல்வீட் டார்கள் அகல்விளக் கேற்றினார்.
கிழவி முதலில் குழந்தையைப் பார்த்து
"மாண்டது குழந்தை மாண்டது" என்றாள்!
மனைவியும் பையனும் மாண்ட சேதி
அதன்பின் அனைவரும் அறிய லாயினர்.
தெருவார் வந்து சேர்ந்தார் உள்ளே.
ஊரினர் வீட்டின் உள்ளே நுழைந்தார்.
அரச காவலர் ஐந்துபேர் வந்தார்.
ஐவரும் நடந்ததை ஆராய்ந் தார்கள்.

32

## NEIGHBOURERS' REACTION AND POLICE INVESTIGATION

The stool thrown by him didn't miss the target
And exactly landed on the elder boy's head!
The master threw another log at him,
But it was a waste, because the boy
Had already breathed his last!
Since there was no oil, the lamps were not lit!
Dark was the house, like the ignorant minds!
The master searched for matches
To light up the lamp; but could not trace it.
When he was at sixes and sevens
Unable to decide whether to wake up his wife
The neighbourers emerged there one by one!
"What is the matter?" asked one among them.
"Has any thief entered?" asked Seenan.
Ettiappan asked the master to light up the lamp.
The old woman of the opposite house asked,
"The child was ailing much!
How about its health now?"
He asked his wife to light up the lantern!
But, no answer came forth from her.
"Perhaps she is in an angry mood!" he said
And asked his son to do so.
No response! Perhaps he was also
Angry with him, he thought!
The neighbourers lit up the lamp.
The old lady went near the child
And announced it was dead!
All the residents of that street were there!
The entire village entered.
Five persons of Police Department came
And commenced their investigation.

33

## கல்வியில்லா வீடு இருண்ட வீடு

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்டவீ டென்க!
படிப்பிலார் நிறைந்த குடித்தனம், நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்க!
அறிவே கல்வியாம்; அறிவிலாக் குடும்பம்
நெறிகாணாது நின்ற படிவிழும்!
சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்
வித்தால் விளைவன மேன்மை, இன்பம்!
செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்?
கல்வி இல்லான் கண்இலான் என்க.
இடிக்குரற் சிங்கநேர் இறையே எனினும்
படிப்பிலாக் காலை நொடிப்பிலே வீழ்வான்!
கல்லான் வலியிலான்; கண்ணிலான்; அவன்பால்
எல்லா நோயும் எப்போது முண்டு.
கற்க எவரும்; எக்குறை நேரினும்
நிற்காது கற்க; நிறைவாழ் வென்பது
கற்கும் விழுக்காடு காணும்; பெண்கள்
கற்க! ஆடவர் கற்க! கல்லார்
முதிய ராயினும் முயல்க கல்வியில்!
எதுபொருள் என்னும் இருவிழி யிலாரும்
படித்தால் அவர்க்குப் பல்விழி கள்வரும்!
ஊமையும் கற்க; ஊமை நிலைபோம்!
ஆமைபோல் அடங்கும் அவனும் கற்க;
அறத்தைக் காக்கும் மறத்தனம் தோன்றும்!
கையும் காலும் இல்லான் கற்க,
உய்யும் நெறியை உணர்ந்துமேம் படுவான்.
இல்லார்க் கெல்லாம் ஈண்டுக்
கல்விவந் ததுவெனில் கடைத்தேறிற் றுலகே!

English Rendering - M.S.Venkatachalam

33

## WHICH IS A DISMAL HOUSE?

Education yields all good things!
A house sans education is a dismal one!
The family of unlettered persons
Is just a grave-yard of corpses!
Wisdom is the result of learning! The family
Lacking it would totter into pieces!
If we learnt, even by spending all our wealth
That seed would yield us happiness and elevate!
What is the use of possessing an ocean-like wealth?
Blind is the person who lacks education!
Even a king who could roar like a lion
Would fall in a trice if he lacked education!
A person without education is weak and blind.
For all kinds of illness, he is a breeding ground!
Let everyone learn! Whatever be the ordeal,
Continue your studies! The more we learn
The more will be the lustre of our life!
Let both men and women learn!
Let e'en the aged attempt to learn!
Even those whose eyes both are blind
Can get numerous eyes by learning!
Let the dumb also learn! The dumbness would be gone!
Let all the meek persons learn!
Needed valour they would get to shield *Aram*!
Let even the limbless person learn!
Then he can learn the art of getting elevation!
If all the have nots got educated
The entire world would get elevated!

[*Aram*:- Tamil term means virtue. But since it has deeper connotation, that term is used here.]

THE END

**APPENDIX**

# POET BHARATHIDASAN

## BIO-DATA

| | |
|---|---|
| Born | - 29th April, 1891 |
| Parents | - M. Kanagasabai – Mrs.Lakshmi |
| Education | - Thirupuliswamy was the teacher for Elementary Education. Tamil Scholar P.A. Periaswamy and Pulavar Bangaru taught him Tamil Literature and grammar. |
| *1909* | - Appointed as a teacher in Niravi near Karaikkal. |
| *1910* | - Freedom fighters like Poet Bharati, Aurobindo and V.V.S. Iyer sought refuge in Pondicherry. Bharathidasan became associated with them. |
| *1912* | - 12th September his father passed away. |
| *1919* | - He was transferred to Thirubhuvanai. He was charged for the offence of treason against the French government and underwent imprisonment for 15 months. As the court turned down the order of dismissal passed against him |

by the Government, he was reappointed as a teacher.

| | |
|---|---|
| 1920 | - Participated in Freedom Struggle. Actively participated in the movement of promoting the sale of Khadi. Got married. Wife:- Palaniammal. |
| 1928 | - Drifted towards the Self-Respect Movement headed by Periar E.V.Ramaswamy. |
| 1929 | - Wrote a number of articles in journals like *Kudiarasu* and *Paguthariyu*. In the whole of India he was the first poet who wrote verses in support of family planning. |
| 1930 | - Dec.,10th became the editor of *Puduvai Murasu* |
| 1933 | - Participated in Atheist Conference conducted at Madras under the presidentship of the famous Trade Union Leader and Rationalist Mr. Ma.Singaravelar. |
| 1934 | - His drama *Iranyan Allathu Inayatra Veera* (Hiranya or A Matchless Warrior) was staged under the presidentship of Periar E.V. R. |
| 1935 | - "Sri Subramania Bharati Kavitha Mandalam" – a journal of verses, first of its kind, was started. |
| 1939 | - "Kavi Kalamegam" – Screenplay, dialogues and lyrics were written for this film, the theme of which was the life history of Poet Kalamegam. |
| 1945 | - Purchased the house No.95, Perumal Koil Street, Pondicherry. |

1946 - Commenced publication of journal *Mullai*. July 26th, he was awarded the title, *"Revolutionary Poet"*. In the special meeting held under the presidentship of Navalar Somasundara Bharathiar, Arignar Anna (C.N. Annadurai) presented him a purse of Rs.25,000/- Nov. 8th retired from service.

1947 - Publication of *Kuyil* from Pudukkottai as a monthly journal.

1948 - *Kuyil*, the journal was banned.

1950 - Poet's 60th birthday was celebrated in Trichy.

1955 - Elected to the Pondicherry Assembly – Became the Speaker of the Legislature.

1958 - *Kuyil* became a weekly journal. Became a member of Tamil Nadu Pulavar Forum.

1961 - Camped at Madras. Attempt was made to shoot a film based on the story of *"Pandian Parisu"* (Pandian's Gift).

1962 - April, 4th – The formation World Tamil Poet's Forum (அனைத்துலகக் கவிஞர் மன்றம்) Rajaji presented him the shield of Tamil Writers' Association.

1963 - Wrote the screenplay and dialogues for a documentary film on the life of Poet Bharati.

1964 - April, 21st – Passed away in the Govt. General Hospital, Madras. April, 22nd – Funeral at Pondicherry.

## MONUMENTS

| | |
|---|---|
| 1965 | - April, 21st – Bharathidasan Memorial Hall was inaugurated by the Municipal Council of Pondicherry. |
| 1968 | - During the Second World Tamil Conference, held at Madras, Bharathidasan's statue was unveiled. |
| 1970 | - Sahitya Akademi Award for his drama, *Piciranthayar*. |
| 1971 | - April, 29th his birthday was celebrated by the Government of Pondicherry. His residential house became the Monument and a Museum was installed there. |
| 1972 | - April, 29th – Pondicherry Government installed his statue in Pondicherry. |
| 1978 | - The Government of Tamil Nadu (M.G.Ramachandran, C.M.) celebrated his birthday. Bharathidasan University was formed at Trichy. Bharathidasan Award of Rs.10,000/- and a gold chain weighing 4 sovereigns. Poet Surada was the first recipient of this award. |
| 1990 | - At the conclusion of the Centenary Celebrations, all his works were nationalized. Rs.2 lakhs were given to each one of his children. (M.Karunanidhi was the C.M. then.) |

## HIS IMPORTANT WORKS

| | |
|---|---|
| 1926 | - Sri Mayilam Subramaniar Thuthiamuthu (A devotional verse) |
| 1930 | - A verse on Khadi and Rattinam. The slope of Sanjeevi Mount. |
| 1937 | - Bharathidasan's Poems – I Part |
| 1941 | - *Ethir Paratha Muththam* ( That Kiss Most Unexpected) |
| 1942 | - *Kudumba Vilakku* – I Part |
| 1943 | - *Pandian Parisu* (Pandiyan's Gift) |
| 1944 | - *Irunda Veedu* ( A Dismal House)<br>*Kaathal Ninaivugal*<br>*Nalla Theerpu (A Drama)*<br>*Azhagin Sirippu*<br>*Kudumba Vilakkau – II Part.* |
| 1947 | - *Sowmian ( A drama)*<br>Bharathidasan *Athichudi*<br>Isai Amuthu |
| 1948 | - *Kathala? Kadamaya?* (A Verse Epic)<br>*Mullaikadu*<br>Anti-Hindi Poems<br>*Paditha Pengal* (A drama)<br>*Kadal Mel Kumizhigal* (A Verse Epic)<br>*Kudumba Vilakku* – III Part |
| 1949 | - Bharathidasan's Poems – II Part<br>*Sera Thandavam*<br>*Thamizhachiyin Kathi* (A Verse Epic) |
| 1950 | - *Kudumba Vilakku* IV & V Parts. |
| 1951 | - *Amizthu Ethu?*<br>*Kazhai Koothiyin Kathal* |
| 1955 | - *Bharathidasan's Poems* – III Part. |

1956 - *Tenaruvi* (Lyrics)

1958 - *Thayin Mel Anai*
Ilaignar Ilakkiyam.

1959 - Dramas of Bharathidasan.
*Kurinji Thittu*

November, 1st – A commentary on Thirukkural.

1962 - *Kannagi Puratchi Kappiam* (An Epic on Kannagi's Revolution)

*Manimekalai Venba.*

**THE END**

Thiru. **M.S. Venkatachalam** was born at T.Murungappatti, Turaiyur Taluk, Trichirappalli District on 07-08-1934. His parents were K. Srinivasan and Rukmani. His high school education was at Zamindar's High School, Turaiyur and then at Ramakrishna Mission Students' Home, Athur, Chinglepet Dist. He had his collegiate education at National College and St. Joseph's College, Trichy. Later, he studied at the Law College, Madras.

He is a good scholar and an eminent translator. Twice he was a Member of the Senate of Bharathidasan University. His "Selected Poems of Bharathidasan" (1992) bears testimony to his skill in the art of translation. Then he translated *Pandian Parisu* (Pandian's Gift – 1999) and *Ethirparatha Mutham* (That Kiss Most Unexpected – 2004) into English. He has also translated the Kavadi Sindhu Hymns of Annamalai Reddiar into English. "Victory Procession", a translation of Ottakoothar's *Moovar Ula* was published by the Sahitya Akademi in 1995.

His translation of Kamban, covering all the six cantos is a masterpiece and the President of India H.E. Dr. Abdul Kalam honoured the author by receiving the first copy of it at Rashtrapati Bhavan, New Delhi on 06-08-2003. The author's other translations include, "Selected Short Stories of Malaysian Tamil Writers", "Select Short Stories of Arignar Anna" and "A Kuravanji of Rishivindam".


BHARATHIDASAN UNIVERSITY
Thiruchirappalli-620 024